JESUS NEVER FAILS
DIVINE GOOD NEWS CENTER

# ஜீவ மன்னா



## அனுதினமும்

**2016 செப்டெம்பர்**

60 வது வெளியீடு

# தலவாக்கலையில் தேவ மகிமை!





## ஏப்ரல் 1,2,3ம் திகதிகளில்

"என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன், அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது." பரி. யோவான் 10:27


அட்டைப் படத்தின் கதை உட்புறத்தில்...!







## அன்பார்ந்த தேவ பிள்ளைகளே!



எமது ஜீவ மன்னா 60வது வெளியீட்டில் இம்முறை அட்டைப்படத்தில் நீங்கள் காண்பது 2016ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ,1,2,,3 ஆகிய மூன்று தினங்களில் தலவாக்கலை நகரசபை விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற மகிமை நிறை சுகமளிக்கும் ஆராதனைகள் பற்றிய செய்திகளாகும்.

அன்பார்ந்தவர்களே! மலையகத்தில் இலங்கையின் ஏனைய பகுதிகளைப் பார்க்கிலும் சுவிஷேசம் அறிவிக்கும் பணி மிகவும் வேகங் குறை



ந்ததாகவே இருக்கின்றது. தேவனது இணையற்ற மகா இரக்கத்தின் காரணமாக இரண்டாவது முறையாக தலவாக்கலை பிரதேசத்திற்கு நற்செய்தியை கொண்டு செல்லும் சந்தர்ப்பம் உதயமானது. நாம் 2011ம் வருடத்தில் அப்பிரதேசத்திற்குச் சென்று 3 நாள் சுவிஷேசக் கூட்டத்தை நடத்தினோம். மீண்டும் 5 வருடங்களுக்குப் பின்னதாக தவலாக்கலை பிரதேசத்திற்குச் செல்ல வாசலைத் திறந்து கொடுத்த மகா உன்னத தேவனுக்கே சகல கனம், துதி, மகிமை உண்டாவதாக!

அன்பார்ந்தவர்களே! இம்முறை தேவ ஆராதனைகள் நடத்திய வேளை அப் பிரதேசத்தில் மழைக் காலமாக இருந்தபடியால் சில சகோதர, சகோதரிகள் எனக்குக் கூறியது அப்பிரதேசத்தில் இடைவிடாது பெய்கின்ற மழையின் காரணமாக அந்தக் கால கட்டத்தில் வெளி மாவட்ட சுவிஷேசக் கூட்டங்களை ஆயத்தமாக்குவது உசிதமல்ல என்றாகும். ஆனாலும் நான் சிருஷ்டிப்பின் தேவனை விசுவாசித்து காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் என்று தேவ வசனம் கூறுவதனால் அங்கு கூட்டங்களை ஒழுங்குபடுத்தினேன். பல நாட்கள் கூட்டத்தைக் குறித்து முன் அறிவித்ததன் பின்பு நான் அங்கு கடந்து சென்றேன். 2வது நாள் மழை மேகங்கள் ஆகாயத்தில் காணப்பட்டன. ஆகையால் எனது சக ஊழியர்கள் அனைவரும் மனக்கலக்கத்துடன் காணப்பட்டார்கள். ஆனாலும் பரிசுத்த வேதாகமத்தில் ஆதியாகமத்தில் 9வது



☞ அட்டைப்படத்தின் உட்புறத்தில் பார்க்கவும்.

# மகிமை! மகா பரிசுத்த தேவனுக்கே

## ஆசிரியர் உரை

### நீங்களே உலகத்திலே பிரகாசிக்கும் சுடர் ஒளி!

கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளைகளே,

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களை அன்புடன் வாழ்த்துகின்றேன். இம்முறை ஜீவ மன்னாவின் 60வது வெளியீட்டைத் தொகுத்து உங்கள் கரங்களில் கிடைக்கச் செய்த அநுக்கிரகத்திற்காக நம் தேவனுக்கே அனைத்து கௌரவமும், மகிமையும், துதியும் உண்டாவதாக! ஜீவ மன்னா வாசகக் கட்டணங்களையும், சந்தோஷக் காணிக்கைகளையும் அளிக்கின்ற உங்கள் அனைவருக்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

தேவ பிள்ளைகளே! நான் உலகிற்கு ஒளியாக இருக்கிறேன் எனவும் "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் என்றும் இயேசுகிறஸ்து கூறியிருக்கின்றார். ஆகையால் சத்திய வசனங்களை உலகிற்கு வெளிப்படுத்துவது எமது தலையாய கடமையாக இருக்கின்றது. இயேசுகிறிஸ்துவின் சீஷரான பவுலடியார் பிலிப்பியர் 2:14இல் கூறுவது "ஜீவ வசனத்தைப் பிடித்துக் கொண்டு உலகத்திலே சுடர்களைப் போலப் பிரகாசிக்கிற நீங்கள்" என்றாகும். தேவ ஆவியானவருக்கூடாக அவர் இப்படியாகக் கூறுகின்றமையால் நீங்களும் நானும் தேவ வசனங்களை உலகிற்கு அறிவிப்பது மிக அவசியமாகும்.

நமது ஜீவ மன்னா தின மஞ்சரியை கடந்த நாட்களிலும் பார்க்க அதிகமாக புதியவர்களுக்கும் கொடுக்க தீவிரமாக செயல்படுங்கள். உங்களுக்குத் தேவையான புத்தகங்களை மாதந்தோறும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலமாக அல்லது நேரடியாகவும் பெறலாம். இன்னுமாக எதிர் காலத்திலும் இவ் வெளியீடுகள் எவ்வித தடைகளுமின்றி, தொடர்ந்து தொகுத்தளிப்பதற்கு தேவனின் கிருபை அளவில்லாமல் எமக்குக் கிடைக்கும்படியாக ஜெபியுங்கள். கொலோசெயர் 3:24இல் எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள் என கூறப்பட்டுள்ளமையால் உங்கள் நற்கிரியைகளுக்கான பலனை பட்சபாதமின்றிப் பெற்றுக் கொள்வீர்கள்.

**உலகத்தின் வெளிச்சம் நீங்கள்!**
**உயர் மலையின் பட்டணம் நீங்கள்!**
**உகந்த சாரமுள்ள உப்பாக இருங்கள்!**
**உன்னதத்தின் பலன் மிகுதி உங்களுக்கே!**

இப்படிக்கு
**இயேசு கிறிஸ்துவுக்குள்**
போதகர் ஏ.ஜே.ஜோசப்
**இயேசு கைவிடார் சுவிஷேசப் பணியகம்**

**மன்னா வாசகர்களே TM இலக்கத்தை அனுப்ப மறந்துவிட வேண்டாம்.**

# இயேசுவின் அற்புத கிரியைகள்

## 15 வருட ஒற்றைத் தலைவலி சுகம்!




W. லீலி மேபல் கிரிஷாந்தி
மாதம்பே

நான் 15 வருடங்கள் ஒற்றைத் தலை வலியால் கஷ்டப்பட்டேன். பகல் 12 மணி வரை வலி மிக அதிகமாக இருப்பதோடு. இவ்வலி ஏற்படுகின்ற போது தலையைச் சாய்க்கவும், மணல் தரையில் நடக்கவும் முடியாதிருந்தது. மாதத்திற்கு இரண்டு, மூன்று தடவைகள் இவ்வலியால் தேவனைப்பட்டேன். வெயிலில் சூரிய ஒளியைப் பார்க்கவும் முடியாதிருந்தேன். இந் நோயின் தாக்கத்தின் போது அதிகமான கோபம் ஞாபகமின்மை என்பவற்றாலும் பாதிக்கப்பட்டேன்.

விஷேடமாக இந் நோய்க்காக வைத்தியப் பரிகாரம் பெற்றுக் கொள்ளவில்லை. வேதனையகற்றும் மாத்திரைகள் மாத்திரம் பாவித்தேன். ஏழு சனிக்கிழமை சுகமளிக்கும் ஆராதனைகளில் கலந்து கொண்ட போது அசுத்த ஆவி என் உடம்பை விட்டகன்றது. பூரண சுகம் பெற்றேன். **15 வருட வேதனையில் விடுதலை அளித்த இயேசுவுக்கே நன்றி!**

## 16 வருட அசுத்த ஆவியில் விடுதலை, நோய்கள் அனைத்திலும் சுகம்!



S.பத்மன்
அரங்கல்ல

எனது மனைவி வாகன விபத்தில் அகப்பட்ட-படியால் அவரது வலது கை விரல்களின் முட்டுகள் கழன்று சதை மாத்திரம் உள்ளங் கையோடு இணைந்திருந்தது. இதற்கு 2 முறை வைத்தியப் பரிகாரம் செய்தும் சுகங் கிடைக்கவில்லை. விரலை மடக்க முடியாதப-டியால் ரூபா 12,000 செலவழித்தும், ஆயுர் வேத வைத்தியப் பரிகாரம் செய்தும் பலன் கிடைக்கவில்லை.

7 வருடங்களாக வலது கை விரல்களை மடக்க முடியாதபடி வீட்டு வேலைகள் செய்ய முடியாமல் மிக வேதனைப்பட்டாள். இந்த சுகமளிக்கும் ஆராதனைகளில் 12 சனிக்கி-ழமைகள் தொடர்ந்து கலந்து கொண்ட வேளை கை விரல்களை நன்றாக மடக்க முடிந்தது. மேலும் 5 வருட தலைவலியில் விடுதலை பெற்றார்.

7 வருடம் இடது காது வலியும் சுகமானது 16 வருடங்கள் வீட்டிலிருந்த அசுத்த ஆவி அகன்று புதிய ஒளி உதயமாகியது. **இயேசுவுக்கே நன்றிகளும், துதிகளும் உரித்தாகட்டும்!**

ஜீவ மன்னா
செப்டெம்பர்
01 வியாழன்

நாம் தேவன் பேரில்
கொண்டுள்ள
விசுவாசத்தின்படி கிரியை
செய்கின்ற தேவன்!

வேதவாசிப்பு
ஆதியாகமம்
அதி: 42-43

**“இயேசு அவர்கள் விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார்.”** (பரி.மாற்கு 2:5)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமமே உங்களுக்கு அடைக்கலமும், பெலனும் அநுகூலமான துணையுமாக இருக்க வாழ்த்துகின்றேன்.** மாதத்தின் முதல் நாளான இன்று கடந்த மாதம் கண்ணின் கரு மணியைப் போல எம்மைப் பாதுகாத்த இயேசுவை ஸ்தோத்தரிக்கின்றேன். இந்த தேவ வசனத்தை வாசிக்கின்ற **நீங்கள் ஆத்மீக தேவ பிள்ளையாக இருப்பின் இயேசுகிறிஸ்துவின் பேரில் அசையாததும், உறுதியானதும், நிலையானதுமான விசுவாசத்தை நீங்கள் கொண்டிருக்க வேண்டுமென தேவன் கூறுகின்றார்.**

தேவ பிள்ளைகளே! இது மிகக் கஷ்டமான காரியமல்லவா என நீங்கள் எண்ணக் கூடும். ஏனென்றால் அருபியாக கிரியை செய்கிற தேவன் பேரில் இவ்வளவாக விசுவாசம் ஏற்படுத்திக் கொள்வது எவ்வாறு? என நீங்கள் சிந்திக்கலாம். ஆனாலும் **கவலைப்படாதீர்கள்**! கர்த்தர் மோசேயின் மூலம் **இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து வெளியில் கொண்டு வந்த வேளை செங்கடல் சவாலாக எழுந்தது,** அவர்களின் பின்னால் எகிப்திய இராஜாவான பார்வோனின் சேனைகள் அவர்களுக்கு எதிராகத் தொடர்ந்தன. முன்னோக்கிச் செல்ல ஒரு வழியும் இல்லாதபடி சிறுமைப்பட்ட போது தேவன் மோசேயை நோக்கி **“நீ என்னிடத்தில் முறையிடுகிறது என்ன? புறப்பட்டுப் போங்கள் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லு நீ உன் கோலை ஓங்கி உன் கையைச் சமுத்திரத்தின் மேல் நீட்டி சமுத்திரத்தை பிளந்து விடு அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்து போவார்கள்” என்றார். மோசே செங்கோலை உயர்த்தி நீட்டிய போது தேவன் பலத்த கீழ் காற்றின் மூலம் அதை வறண்டு போகப் பண்ணினார். ஜலம் பிளந்து பிரிந்து போயிற்று.**

தேவ பிள்ளைகளே! பரலோகப் பிதாவின் திருக்குமாரனான இயேசுகிறிஸ்து எங்களுக்கு கூறுவது நமது விசுவாசத்தின்படியே நம்மை ஆசீர்வதிப்பதாக! அன்று சிவந்த சமுத்திரத்தினருகில் மோசேயும் **இஸ்ரவேல் ஜனங்களும் மிகக் கடினமான பிரச்சினைக்கு முகங் கொடுத்த வேளை கர்த்தரின் வசனத்தை கேட்டவுடனே செயல்பட முனைந்ததினால் மிகவும் ஆச்சரியமான நிகழ்வு நிகழ்ந்தது.** அன்று மோசேயின் விசுவாசத்தினால் அதைக் கண்களினால் கண்டார்கள். **பரி.மாற்கு 2:5**இன்படி அன்று **“இயேசுகிறிஸ்து திமிர்வாதக்காரனை தூக்கிக் கொண்டு வந்த உடனேயே குணமாகியது, தூக்கிக் கொண்டு வந்த நால்வரின் விசுவாசத்தினாலேயே”** ஆகும். உறுதியான விசுவாசத்தின் பெலனை உங்களுக்குள் நிலை நிறுத்திக் கொள்ளுங்கள். அற்புதத்தை காணுங்கள். **வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவனே! உங்கள் ஒரே பேறான குமாரனை இவ்வுலகிற்கு அனுப்பியது தேவன் பேரில் விசுவாசத்தின் பிள்ளைகளாக வாழ்வதற்கே! இன்றைய நாளின் செய்தியின்படி விசுவாசத்தை பெலனைக் கொண்டு அற்புத தரிசனங்களைக் காண உதவி செய்யுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன்.” (பரி.மாற்கு 11:24)

## அதிகாலையில் ஜெபித்து தேவ கிருபையைப் பெற்றுக் கொள்ளுங்கள்!

வேதவாசிப்பு
ஆதியாகமம்
அதி: 44-45

**"நாங்கள் எங்கள் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி, காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும்."** (சங்கீதம் 90:14)

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! இன்று உங்களுக்கென்று உதயமாகிய இந்நந்நாளில் **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் அவரின் நீடிய சாந்தத்திலும், மிகுந்த கிருபையிலும் களி கூர்ந்திருக்கும்படியாக வாழ்த்துகின்றேன்.** எங்கள் தேவன் அவரது பிள்ளைகளான எம்மை எப்போதும் சந்தோஷத்துடன் வாழச் செய்கின்றவராவர். ஏனென்றால் நாம் மகிழ்ந்திருப்பதையே காண தேவன் விரும்புகிறார்.

தேவ பிள்ளகைளே! எங்கள் மீட்பர் இயேசுகிறிஸ்து எமக்குக் கூறியது, **பரி.யோவான் 15:11இல் "என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்"** என்றாகும். ஆகையால் உள்ளம் கலங்காதிருங்கள்! எம்மை சிருஷ்டித்த தேவ பிதாவானவர் **அவரது ஒரே பேறான குமாரனை உலகிற்கு அனுப்பியது பாவ, சாபங்களின் நிமித்தம் நோயுற்று, வாழ்வு சீர்குலைந்து மிகவும் சிறுமைப்பட்டு வேதனையோடும், கண்ணீரோடும் வாழ்கின்ற எம்மை அவைகளின்று மீட்டு மகிழ்ச்சியாக வாழ வைப்பதற்கேயாகும்.** ஆகையால் இயேசுகிறிஸ்து இன்றும் எமது வாழ்வில் பூரண மகிழ்ச்சியை கொடுப்பதற்காகவே கிரியை செய்கின்றார். மேலே கூறப்பட்ட **சங்கீதம் 91:14**இல் குறிப்பிடப்படுகின்றதாவது, **"எங்கள் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும்"** என்றே.

தேவ பிள்ளைகளான நாம் ஒவ்வொரு நாளும் அதிகாலையில் **தேவனுடைய பாதத்தில் காத்திருந்து எமது வாழ்வை தேவனிடம் அர்ப்பணிக்க வேண்டும்.** அப்பொழுது நாள் முழுவதும் தேவன் எம்மைப் பாதுகாத்து எமது வாழ்க்கை சம்பந்தமான அன்றன்றைக்கு உரித்தான அனைத்து காரியங்களையும் அவரது பிரியத்தின்படியும், சித்தத்தின்படியும் நிறைவேற்றுவார். தினமொன்று முடிவடைந்ததன் பிறகு புதிய தினத்தில் நாம் காலடி வைப்பது **தேவனின் அளவற்ற இரக்கத்தினால் சகல தீமைகளினின்றும் பாதுகாப்பைப் பெற்றதனால் அல்லவா?** அப்படியானால் புதிய நாளை ஸ்தோத்திரத்தோடு தேவனின் அருமையான அன்பைத் தியானித்து, தேவ பாதத்தில் காத்திருந்து ஆரம்பிக்கும் போது இன்னும் அளவற்ற இரக்கத்தினால் **எங்களை பாதுகாத்து நாள் முழுவதும் நிறைவான சந்தோஷமாய் வைக்க தேவன் கிரியைச் செய்வார்.** அதிகாலையில் தேவனின் கிருபையை பெற்றுக் கொள்ளுங்கள். **வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

மகா பரிசுத்தமுள்ள பிதாவே! உங்கள் இரக்கத்தை குறைவின்றி என் மீது ஊற்றுவீர் என்பதை அறிவேன். ஆதிகாலையில் உமது சமுகத்தில் ஜெபத்தில் காத்திருக்க உதவி செய்யுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.

~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவருடைய கோபம் ஒரு நிமிஷம், அவருடைய தயவோ நீடிய வாழ்வு; சாயங்காலத்தில் அழுகை தங்கும், விடியற்காலத்திலே களிப்புண்டாகும்." (சங்கீதம் 30:5)

ஜீவ மன்னா

செப்டெம்பர்

03 சனி

**தேவனுடைய வாக்குத்தத்தின் வசனங்களைக் கொண்டு ஜெபியுங்கள்!**

வேதவாசிப்பு

ஆதியாகமம்
அதி: 46-47

**"ஜனங்கள் அவர்களை அழைத்துக்கொண்டுபோய் அவர்கள் ஸ்தானத்தில் விடுவார்கள்; இஸ்ரவேல் வம்சத்தார் கர்த்தருடைய தேசத்திலே அவர்களை வேலைக்காரராகவும் வேலைக்காரிகளாகவும் கையாண்டு, தங்களைச் சிறையாக்கினவர்களைச் சிறையாக்கி, தங்களை ஒடுக்கினவர்களை ஆளுவார்கள்."** (ஏசாயா 14:2)

அருமையான தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு வேறு பிரிக்கப்பட்டவர்களே இன்றைய நாள் உங்களுக்கென்று உதயமான, நன்மையான நாளாக இருப்பதனால் தேவனை ஸ்தோத்தரிக்கின்றேன்.** தேவ்னால் கூறப்பட்ட ஒரு வசனமும் வெறுமையாகத் திரும்பாத வண்ணம் அவ்வசனங்கள் எமது வாழ்வில் காரியங்களை வாய்க்கப் பண்ணுமென்றும், **ஆசீர்வாதங்களை பெருக்கும் என்றும் கூறிய தேவன் இன்றும் எங்களோடிருப்பதனால் கலங்காதிருங்கள்!**

தேவ பிள்ளைகளே! எங்கள் சர்வ வல்லமையுள்ள தேவனது வாயினால் வெளிப்படுத்தப்பட்ட வசனத்திற் கூடாக உலகமும், இங்குள்ள யாவையும் உருவாக்கப்பட்டு **ஆளுகை பண்ணப்படுகின்றதென்பதை நாமறிவோம்.** பரிசுத்த வேதாகமத்தில் காணப்படுகின்ற தேவ வசனத்திற் கூடாக தேவன் எங்களோடு பேசுகின்றார். அனைத்தையும் கற்பிக்கின்றார். விஷேடமாக மனிதனது பாவங்கள் காரணமாக விலைக்கிரயம் செலுத்த தேவ பிதாவானவரின் **ஒரே பேறான குமாரன் இயேசுகிறிஸ்து எமக்காக உலகிற்கு மனு உருவில் அவதரித்து எங்கள் பாவங்களின் தண்டனையான மரணத்தை தானே சிலுவையில் சுமந்து தன்னை பலியாக அர்ப்பணித்த அந்த மாபெரும் தியாகத்தை ஏற்றுக் கொள்கின்ற யாவரும் பாவ மன்னிப்பை பெற்றுக் கொள்வது என்பதையும் நாம் அறிந்துக் கொண்டது தேவ வசனத்தில் அல்லவா?**

தேவ பிள்ளைகளே! எங்கள் மீட்பர் இயேசுகிறிஸ்துவின் பேரில் விசுவாசங் கொள்கின்ற அனைவரும் பரலோக தேவனின் சொந்த பிள்ளைகளாகும் வரப்பிரசாதத்தை பெறுவார்கள் என்பது அங்கே எழுதப்பட்டுள்ளதல்லவா? **அது மாத்திரமின்றி எங்கள் பூமிக்குரிய வாழ்வின் எல்லாக் காரியங்களும், மரணத்தின் பின்பு எங்கள் ஆத்துமா சம்பந்தமான அனைத்தும் தெளிவாக எழுதப்பட்டுள்ளது.** இன்னுமாக எம்மை ஆசீர்வதிப்பதாக கூறியுள்ள பெரும்பாலான வாக்குத்தத்தங்களுண்டு. ஆகையால் **ஒசியா 14:2இல் "தேவ பாதத்திலிருந்து எங்கள் பிதாவானவரிடம் அவரது வார்த்தைகளைக் கொண்டு பேசுவோமாகில் தேவன் தனது வசனத்தை நிறைவேற்றாமல் இருப்பாரா?" என எழுதப்பட்டுள்ளது.** ஆகையால் எதைக் குறித்தும் அதைரியப்படாதீர்கள்! தேவன் கூறிய வார்த்தைகளை தியானம் பண்ணி அந்த வசனத்திற்கூடாக உங்கள் பிதாவானவரோடு பேசுங்கள். உங்களுக்கு பதில் கிடைக்கும். **ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

என் நல்ல இயேசுவே! நீங்கள் வார்த்தையானவராக இருக்கின்றீர்கள். ஆகையால் உங்கள் வாயின் வார்த்தைகளுக்கூடாக அனைத்தும் உருவாக்கப்பட்டன. நீங்கள் என் கரங்களுக்களித்த வேதாகம வசனங்களுக்கூடாக உங்களோடு பேசுவதற்கு எனக்கு ஒத்தாசையளிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவைகளைக் கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்." (நீதிமொழிகள் 4:22)

ஜீவ மன்னா
செப்டெம்பர்
04 ஞாயிறு

தேவ வசனங்களைக் கைக் கொள்வதினால் மிகுந்த பலன்களைப் பெறுவீர்கள்!

வேதவாசிப்பு
ஆதியாகமம்
அதி: 48-49

**"அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன்; அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு."** (சங்கீதம் 19:11)

இயேசுகிறிஸ்துவின் ஈடு இணையற்ற வல்லமையான நாமத்தில் **அன்பார்ந்தவர்களே இன்றைய இக்காலைப் பொழுதில் தேவ சமாதானம் உங்களை ஆளுகை பண்ணும்படியாக வாழ்த்துகின்றேன்.** தேவ வசனங்கள் அடங்கிய பரிசுத்த வேதாகமத்தை கரங்களில் வைத்திருக்கும் தேவ பிள்ளைகளாகிய **நாம் மிகுந்த அதிர்ஷ்டக்காரர்களாவோம்!** ஏனென்றால் எங்கள் வாழ்க்கைக்கும், **நித்திய ஜீவனை பெற்றுக் கொள்வதற்கும் தேவைப்படுகின்ற அனைத்து காரியங்களையும், அறிவுத்திறமைகளையும் வெளிப்படுத்துவது தேவ வசனங்களே!**

தேவ பிள்ளைகளே! ஆனாலும் தேவ வசனங்களை நாம் அறிந்த மாத்திரத்தில் **எங்களுக்கு அதன் ஆசீர்வாதங்கள் கிடைப்பதில்லை என்பதை நாம் அறிய வேண்டும்.** ஏனென்றால் நாம் செவிமடுக்கிற, நாம் வாசிக்கின்ற **தேவ வசனம் எமது வாழ்வில் கிரியையிலே காணப்படாவிடின் அவ்வசனத்தில் அடங்கியுள்ளதும், வெளிப்படுத்தப்பட்டதுமான ஆசீர்வாதங்கள் எமது வாழ்வில் நிறைவேறுவதில்லை. தேவ வசனத்தில் உபாகமம் 11:19**இல் எழுதியிருப்பது, **நீங்கள் என் வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும் உங்கள் ஆத்துமாவிலும் பதித்து, அவைகளை உங்கள் கையின் மேல் அடையாளமாகக் கட்டி, உங்கள் கண்களின் நடுவே ஞாபகக் குறியாக வைத்து** என்றே. அத்தோடு **உபாகமம் 11:21**இல் எழுதப்பட்டிருப்பது **"அவைகளை உங்கள் வீட்டு நிலைகளிலும், உங்கள் வாசல்களிலும் எழுதுவீர்களாக"** என்றாகும். இதிலிருந்து தெளிவாக விளங்குவது ஆத்மீக பிள்ளைகளுக்கு அவர்களது வாழ்வில் தேவ வசனங்கள் இன்றியமையாததொன்றாகும் என்பதே.

தேவ பிள்ளைகளே! இன்றைய நாளில் **சங்கீதம் 19:11**இல் எழுதப்பட்டிருப்பது, **"தேவனது வசனத்திற்கூடாக எங்களுக்கு எச்சரிக்கை கிடைப்பதாகவும், அவைகளை தொடர்ந்து கைக் கொண்டால் மிகுந்த பலன்களைப் பெறுவோம்"** என்றேயாகும். ஆகையால் எமது தாய் மொழியிலேயே வாசிக்க மிகவும் இலகுவாக தேவ வசனங்கள் எழுதப்பட்டு எம் கரங்களுக்கு அளித்திருக்கும் தேவனுக்கு எவ்வளவாக அன்பு செலுத்த வேண்டும். ஒவ்வொரு நாளும் நாங்கள் முகங் கொடுக்கும் அனைத்து **பிரச்சினைகள், சவால்கள், உபத்திரவங்கள் அனைத்தையும் தேவனிடம் ஒப்படைத்து தேவனது வசனங்களை விசுவாசித்து அவைகளைக் கடைப்பிடிப்போமெனின் அனைத்திலும் ஜெயங் கிடைக்கும்.** தேவ வசனத்திற்கூடாக நன்மையான வழிகளை நோக்கி நடவுங்கள். அத்தோடு தேவ வசனங்களே உங்கள் வாழ்வின் அத்திவாரமாக இருக்கட்டும். **ஆசீர்வாதத்தின் நாள்!**

ஜெபம்

எங்களை நேசிக்கிற அருமை இரட்சகரே! உங்கள் வசனங்கள் யாவும் உயிருள்ளவைகளும், வல்லமையானவைகளுமாய் இருக்கிறது. ஆகவே தேவ வசனங்களைக் கேட்டு வாசித்து அவைகள் நிறைவேற உங்கள் ஆசீர்வாதங்களை பொழிகின்றவராதலால் வசனங்களுக்கூடாக வாழ உதவி செய்யுங்கள் என இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஆதலால் பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்; என் வழிகளைக் காத்து நடக்கிறவர்கள் பாக்கியவான்கள்." (நீதிமொழிகள் 8:32)

ஜீவ மன்னா
செப்டெம்பர்
05 திங்கள்

நீங்கள்
பெற்ற ஆசீர்வாதங்கள்
நிலைத்திருக்க பாவஞ்
செய்யாதிருங்கள்!

வேதவாசிப்பு
ஆதியாகமம் 50
யாத்திராகமம் 01

**"அதற்குப்பின்பு இயேசு அவனைத் தேவாலயத்திலே கண்டு: இதோ, நீ சொஸ்தமானாய், அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ்செய்யாதே என்றார்."** (பரி.யோவான் 5:14)

தேவனின் கிருபையால் வழிநடத்தப்படும் என் **அன்புக்குரியவர்களே! இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் இக்காலைப் பொழுதில் உங்களை வாழ்த்துகின்றேன்.** எங்களை பாவத்திலிருந்து மீட்க உலகில் அவதரித்து இயேசுகிறிஸ்து இன்றும் எம்மோடு ஜீவனுள்ளவராக வாசம் பண்ணுகிறார். தேவன் உலக மாந்தர் அனைவருக்காகவும் சிலுவையில் தன் உயிரைப் பலியாக ஒப்புக் கொடுத்தது நாங்கள் பாவங்களின் நிமித்தம் பெற வேண்டிய தண்டனையை அவர் சுமக்கும்படியாகவேயாகும். **"மரித்தவன் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே"** என **ரோமர் 6:7**இல் எழுதப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்தது எமது பாவங்களின்று எம்மை மீட்கும்படியாகவே என்பதை முழு உள்ளத்தோடு விசுவாசிக்கும் யாராகயிருப்பினும் **அவர் சரீரத்திலிருந்து சிந்தப்பட்ட பரிசுத்த இரத்தத்தினால் அவர்கள் பாவங்கள் அனைத்தையும் கழுவி சுத்திகரித்து பரிசுத்தப்படுத்துகின்றார்.** இதன் காரணமாகவே **I யோவான் 1:7**இல் **"அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்"** என்றெழுதப்பட்டுள்ளது. இன்னுமாக நாம் பாவம் செய்யாதவர்கள், தம்மிடம் பாவம் இல்லையென யாராலும் கூற முடியாது. பரிசுத்த வேதாகமத்தில் **ரோமர் 3:23**இல் **எல்லாரும் பாவஞ் செய்து தேவ மகிமையற்றவர்களாகி என்றெழுதப்பட்டுள்ளமையால் எல்லா மனிதர்களுக்கூடாகவும் பாவங்கள் நிகழ்கின்றது என்பதில் சந்தேகமில்லை.**

தேவ பிள்ளைகளே! மனிதர்களாகிய எமக்கு எம் பாவங்களுக்கு மன்னிப்பு பெற்றுத் தரும்படியாக, உலகில் அவதரித்து எங்கள் மீட்பராகவும், தேவ மைந்தனாகவும் நாம் அறிந்து கொண்ட நம் இயேசுகிறிஸ்து **"அவரது மாசற்ற இரத்தத்தினால் சிவப்பு நிறமாக இருக்கின்ற பாவங்கள் உறைந்த மழையைப் போல் வெண்மையாக்குவார். அவைகள் இரத்தாம்பரம் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப் போலாக்குவார்."** ஆகையால் **பரி.யேவான் 5:14**இல் இயேசுகிறிஸ்து கூறுவது போல் பாவங்கள் அனைத்தும் **இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்டு பரிசுத்தபட்ட நாம் மீண்டுமாக பாவஞ் செய்ய முற்படாத நீதிமானாக வாழுமிடத்து தேவ ஆசீர்வாதங்கள் எம்மில் நிறைந்திருக்கும். உங்கள் ஆசீர்வாதங்கள் நிலை நிற்க பாவஞ் செய்யாதிருங்கள். ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! பாவியாக உலகில் வாழ்ந்த என்னை பாவத்தில் மீட்டு விடுதலை பெற்றுத் தந்தது நீரே! மீண்டுமாக பாவஞ் செய்யாதபடி நீங்கள் எம்மை பெலப்படுத்தி உங்கள் வல்லமையைத் தாருங்கள் இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி, உன் பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டு,..."(சங்கீதம் 103:3-4)

ஜீவ மன்னா
செப்டெம்பர்
06 செவ்வாய்

# சோதனைகளில் ஜெயம் பெற தேவ வசனத்தை பட்டயமாக்கிக் கொள்ளுங்கள்!

வேதவாசிப்பு
யாத்திராகமம் அதி: 02–03

**"அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான்."** (பரி.மத்தேயு 4:3)

நேற்றும் இன்றும் என்றும் மாறாத **இயேசுவின் அன்பைப் பெற்ற என் அன்பு பிள்ளைகளே! கர்த்தருக்குள் இன்றும் சந்தோஷமாயிருங்கள் என ஜீவிக்கின்ற இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகின்றேன். சோதனைக்காரன் என்றால் யார்? என நினைக்கின்றீர்களா? பரி.மத்தேயு 4:1**இல் எழுதப்பட்டுள்ளது. **"அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்கு கொண்டு போகப்பட்டார்"** என்றே. இதிலிருந்து தெளிவாக விளங்குவது **சோதனைக்காரன் எனக் கூறப்படுவது சாத்தானே** என்றாகும்.

தேவ பிள்ளைகளே! **அன்று இயேசுகிறிஸ்துவே பிசாசினால் சோதனைக்குட்படுத்தப்பட்டாராகில் அவரது பிள்ளைகளாகிய நாம் எம்மாத்திரம்?** ஆகையால் **கலங்காதிருங்கள்!** இயேசுகிறிஸ்து எமக்கு வாக்களித்திருப்பது **உலக முடிவு பரியந்தம் சகல நாட்களும் எங்களோடிருப்பதாகவே. தேவன் எம்மோடிருப்பதனால் அவர் சாத்தான்** எனும் **"பிசாசின் சோதனைகளின்று ஜெயம் பெற்றமையால் நாங்களும் சாத்தானின் சோதனைகளில் ஜெயம் பெற உதவி செய்கின்றார். மேலே கூறப்பட்ட பிரதான வசனத்தில் சாத்தான் எனும் சோதனைக்காரன் இயேசுகிறிஸ்துவிடம் வந்து நீர் தேவனுடைய குமாரனேயானால் இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும்** என்றான். **"அவர் பிரதியுத்தரமாக மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்"** என்று எழுதியிருக்கிறதே என்றார்.

தேவ பிள்ளைகளே! அது மாத்தரமின்றி **"சாத்தான் அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டு போய் தேவாலயத்து உப்பரிகையின் மேல் நிறுத்தி நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக் குதியும் ஏனெனில் தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்து கட்டளையிடுவார்"** என்றும், **"உயர்ந்த மலையின் மேல் கொண்டு போய் உலகத்தின் சகல ராஜ்யங்களையும், அவைகளின் மகிமையையும் அவருக்கு காண்பித்து நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைப் பணிந்து கொண்டால் இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன்"** எனக் கூறினான். இந்த எல்லாச் சந்தர்ப்பங்களிலேயும் தேவ வசனத்திற்கூடாக **சாத்தானுக்கு பதில் கொடுத்தார்.** அப்பொழுது அவன் அவரை விட்டு விலகிப் போனான். நீங்களும் ஜெபித்து தேவ வசனங்களைத் தியானித்து உங்கள் ஆத்துமாவை பெலப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் சோதனைகளில் ஜெயம் பெற தேவ வசனத்தை ஆயுதமாக்கிக் கொள்ளுங்கள். **வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் இயேசுவே! சாத்தானுக்கு விரோதமாயிருந்து என் வாழ்வில் ஜெயம் பெற உதவி செய்யுங்கள். உங்கள் தேவ வசனத்திற்கூடாக நீங்கள் என் ஆத்துமாவை பெலப்படுத்தி, வல்லமைப்படுத்துமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். -ஆமென்-

வேத வாக்குத்தத்தம்

"தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும்,..." (எபிரேயர் 4:12)

ஜீவ மன்னா
செப்டெம்பர்
07 புதன்

கர்த்தர் எமக்காக யாவையும் செய்து முடிப்பார்!

வேதவாசிப்பு
யாத்திராகமம்
அதி: 04-05

**"கர்த்தாவே, எங்களுக்குச் சமாதானத்தைக் கட்டளையிடுவீர்; எங்கள் கிரியைகளையெல்லாம் எங்களுக்காக நடத்திவருகிறவர் நீரே."** (ஏசாயா 26:12)

அருமையான தேவ பிள்ளைகளே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்று எல்லாக் காரியங்களிலும் ஜெயம் பெற்று மகிழ்ச்சியோடு வாழ வாழ்த்துகின்றேன்.** ஏனென்றால் மேலே கூறப்பட்ட பிரதான வேதாகம வசனத்தில் எழுதியிருப்பது எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்கள் வாழ்வில் அனைத்து காரியங்களையும் எங்களுக்காக நடத்தி வருகிறவர் என்றே. ஆகையால் **மனங்கலங்காதிர்கள்!**

தேவ பிள்ளைகளே! எங்கள் தேவனானவர் **எங்கள் விசுவாசத்தைக் குறித்து பிரியமாகவிருக்கிறார். அந்தப்படியே தேவன் உள்ளத்தின் விருப்பங்களை நிறைவேற்றித் தருவார் என்று முழு உள்ளத்தோடு விசுவாசிக்கின்றேன் என்று உங்களுக்கு தேவனுக்குள் அசைக்க முடியாத உறுதியான விசுவாசம் இருந்தால் தேவன் உங்களுக்கு அவைகளை நிறைவேற்றுவார். "நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என மார்த்தாள் எனும் பெண்ணுக்கு இயேசு கூறிய வசனமே இதுவாகும்." பரி.யோவான் 11:40** சில வேளைகளில் நாம் கண்களில் காணாத அருபியான தேவனை விசுவாசித்து நாம் ஜீவிக்கின்ற வேளை, தேவனை விசுவாசிக்காத ஜனங்களுக்கு எங்களைக் குறித்து வேடிக்கையாகவிருக்கலாம். **நானும் எனது தேவனுக்காக ஊழியம் செய்ய வேண்டுமென்ற தீர்மானத்தோடு வேலையை ராஜினாமா செய்து தேவ ஊழியத்திற்காக என்னை அர்ப்பணித்த போது நானும் மற்றவர்களுக்கு வேடிக்கைப் பொருளானேன்.**

தேவ பிள்ளைகளே! வெளிநாட்டிலிருந்து வரும் உல்லாச பிரயாணிகளுக்கு வழிகாட்டினராகவும், சாரதியாகவும் வேலை செய்த எனக்கு உயர் சம்பளத்தோடு, வருகின்ற உல்லாச பிரயாணிகளிடமிருந்து எண்ணற்ற கொடுப்பனவுகளும் கிடைத்தன. ஆனாலும் வேலையை கைவிட்டு நான் தேவ ஊழியத்திற்கு என்னை அர்ப்பணித்த வேளையிலும் இன்று வரை ஒன்றிலும் குறைவில்லாமல் என்னை வழி நடத்துகிறார். ஏனென்றால் **யெகோவாயீரே அனைத்தையும் கொடுத்து ஆசீர்வதிக்கின்ற தேவன்.** இதுவரை **30 வருடக் காலத்தில் ஆத்மீக வாழ்வில் என்னை முன்னோக்கிக் கொண்டு வந்து எனது சொந்த குடும்ப வாழ்விலும் எனது ஊழியத்தின் ஆசீர்வாதங்களால் நிறைத்து சகலவற்றையும் சந்தித்திருக்கின்றார்.** தேவன் எமக்காக யாவையும் செய்து முடிப்பவர் என்பதால், **நாம் கேட்பதற்கும், விண்ணப்பிக்கிறதற்கும் எமது எதிர்பார்ப்பிற்கும் மேலாக காரியங்களை செய்ய வல்லவராயிருக்கிறார் என்பதை விசுவாசித்து பயமின்றி முன்னோக்கிச் செல்லுங்கள். ஆசீர்வாதமான நாள்!**

ஜெபம்

உன்னதத்தில் வாசம் செய்யும் பரிசுத்தமுள்ள தேவனே! நீங்கள் என்னை சிருஷ்டித்த தேவன் என்பதால் என் வாழ்வை நீங்கள் பொறுப்பேற்று இன்று முதல் என் வாழ்வின் காரியங்கள் யாவையும் நிறைவேற்றி ஆசீர்வதிக்க வேண்டுமென இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்." (பரி.யோவான் 6:40)

ஜீவ மன்னா
செப்டெம்பர்
08 வியாழன்

பிதாவின் சித்தத்தை அறிந்து அவைகளை நிறைவேற்ற தீவிரப்படுங்கள்!

வேதவாசிப்பு
யாத்திராகமம்
அதி: 06-07

**"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை."**
(பரி.மத்தேயு 7:21)

அன்புக்குரியவர்களே! **இயேசுகிறிஸ்துவின் அன்பு நிறைந்த நாமத்தினால் ஜீவ மன்னா வாசகர்கள் உங்கள் அனைவரையும் முழு உள்ளத்தோடு இன்றைய நாளில் வாழ்த்துகின்றேன்.** இன்றைய நாளிலும் இயேசுகிறிஸ்துவைப் பற்றி அறிந்து **அவரே உங்கள் மீட்பர் என்பதை முழு உள்ளத்தோடு விசுவாசிக்கும் நீங்கள் மிக அதிர்ஷ்டக்காரர்கள்!** ஏனென்றால் இயேசுகிறிஸ்து கூறுவது **"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வாரான்" யோவான் 14:6** என்றே. ஆகையால் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட நீங்கள் பரலோக இராஜ்யத்தின் உரிமையாளர்களாக இருப்பீர்கள்.

தேவ பிள்ளைகளே! **பரி.மத்தேயு 7:21**இல் எழுதியிருப்பது **"பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல் என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை"** என்றாகும். ஆகையால் பரத்தில் வாசம் பண்ணும் எங்கள் பிதாவின் சித்தம் என்ன? என்பதை நாம் நன்கு அறிந்துக் கொள்ள வேண்டும். தேவன் பரிசுத்த தேவன் என்பதால் தேவனின் பிள்ளைகளான உலகில் வேறு பிரிக்கப்பட்ட நாமும் பரிசுத்தமாக வாழ்வது தேவனின் பிரியமாகும். **லேவியராகமம் 20:26**இல் தேவன் கூறுவது, **"கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்கள் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக, நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு உங்களை மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்தேன்"** என எழுதப்பட்டுள்ளது. **உபாகமம் 12:28**இல் **"நீ உன் தேவனாகிய கர்த்தரின் பார்வைக்கு நன்மையும் செம்மையுமானதைச் செய்வதினால் நீயும் உனக்குப் பின்வரும் உன் பிள்ளைகளும் என்றென்றைக்கும் நன்றாயிருக்கும்படிக்கு நான் உனக்கு கற்பிக்கிற இந்த எல்லா வார்த்தைகளையும் நீ கவனித்துக் கேள்"** என்று கூறப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! இதிலிருந்து தேவனின் வசனங்களைக் கேட்டு அவைகளில் நிலைத்து ஜீவிக்கும் போது எங்களுக்கும் எமது பிள்ளைகளுக்கும் நன்மையானவைகளே நிகழுமென தெளிவாக அறியக்கூடியதாயுள்ளது. எமது வாழ்வு **தேவனுக்குப் பிரியமான பரிசுத்தமாக வாழ்வாக இருப்பின் தேவன் எமது வாழ்வில் அவரது ஆசீர்வாதங்களை பொழிந்திடுவார். அது பரலோக ராஜ்யத்திற்குள் செல்லும் ஆசீர்வாதமே!** ஆகையால் தேவனுக்குப் பிரியமானவைகளை நிறைவேற்ற உற்சாகத்தோடு செயல்படுங்கள். **கிருபையின் நாள்!**

ஜெபம்

சர்வ வல்லமையுள்ள தேவனே! நீங்கள் என்னைத் தேர்ந்தெடுத்தது இப்பூலோக ஆசீர்வாதங்களைப் பெற்றவராக மாத்திரமின்றி பரலோக ஆசீர்வாதங்களைப் பெறவும், நித்திய ஜீவனைப் பெற்று உரிமையுள்ளவராக்குவதற்கே! தேவனுக்குப் பிரியமான வாழ்வை வாழ உதவி செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது என்றார்." (பரி.யோவான் 6:40)

ஜீவ மன்னா
செப்டெம்பர்
09 வெள்ளி

**கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருங்கள்!**

வேதவாசிப்பு
யாத்திராகமம்
அதி: 08-09

**"அப்பொழுது நான் தேவனுடைய பீடத்தண்டைக்கும், எனக்கு ஆனந்த மகிழ்ச்சியாயிருக்கிற தேவனிடத்திற்கும் பிரவேசிப்பேன்..."** (சங்கீதம் 43:4)

என் அருமையான தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் நீங்கள் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய் இருக்கும்படியாக இன்றைய நாளில் உளமாற வாழ்த்துகின்றேன்.** உலக மனிதர்கள் அவர்கள் வாழ்க்கைக்கு மகிழ்ச்சியை மாத்திரமின்றி சமாதானத்தை பெற்றுக் கொள்ளும்படியாக பலவித செயல்களில் ஈடுபடுகின்றார்கள். ஆனாலும் அப்படியாக பெற்றுக் கொள்கின்ற சந்தோஷமும், சமாதானமும் தற்காலிகமானதாகலாம். **அது சில நேரத்திற்கு மாத்திரமே அவர்களோடு தரித்திருக்கும்.**

தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்து எமக்கு வாக்குக் கொடுத்திருப்பது, **"சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை." உங்கள் இருதயம் கலங்காமலும், பயப்படாமலும் இருப்பதாக** என்றே. **(பரி.யோவான் 14:27)** அப்படியானால் தேவனுக்குள்ளாக எங்களுக்குக் தற்காலிகமானவைகள் போல் அல்ல என்பது தெளிவாக விளங்குகின்றது. ஏனென்றால் மேலே கூறப்பட்டுள்ள **சங்கீதம் 43:4**இல் **"தாவீது ராஜா அப்பொழுது நான் தேவனுடைய பீடத்தண்டைக்கும் எனக்கு ஆனந்த மகிழ்ச்சியாயிருக்கிற தேவனிடத்திற்கும் பிரவேசிப்பேன்"** எனக் கூறுகின்றார். ஆகையால் **நீங்கள் கலங்காதீர்கள்!** எங்கள் தேவனாகிய கர்த்தர் அவரது திருக்குமாரனான இயேசுகிறிஸ்துவுக்கூடாக எங்களை அவரண்டைக்கு அழைத்து அவரது பிள்ளைகளாக்கிக் கொண்டமையால் எமக்கு இயேசுகிறிஸ்துவுக்கூடாக மகிழ்ச்சியை கொடுக்காமல் இருப்பாரா?

தேவ பிள்ளைகளே! **நாங்கள் பரலோக தேவ பிதாவானவரின் பிள்ளைகளானதன் பின்பு தேவனின் பரிசுத்த தேவ ஆவியானவர் எங்களுக்குள் எங்கள் உள்ளத்தில் வாசம் பண்ணுகிறார்.** அவர் பரிசுத்த ஆவி ஆவியானவராக கிரியை செய்வதனால் எங்கள் ஆவியோடு ஒருங்கிணைந்து **எங்கள் உள்ளத்தில் காணப்படும் துக்கங்கங்கள் அனைத்தையும், வேதனைகளையும் அகற்றி தேவனின் அதிகமான மகிழ்ச்சியை எங்களுக்கு தருவார்.** அதிக மகிழ்ச்சி என்பது நாங்கள் நினைக்கிறதற்கும் மேலாக எங்களுக்குக் கிடைக்கின்ற மகிழ்ச்சியே இன்றைய நாள் வரைக்கும் **உங்கள் வாழ்வில் நீங்கள் அனுபவித்த துன்பங்கள், வேதனைகள், நோய்கள், உபத்திரவங்கள் என்பவற்றிலிருந்து தேவன் உங்களை விடுவித்தாரானால் உங்களுக்கு தேவனின் அதிகமான மகிழ்ச்சி கிடைக்கும். நீங்கள் ஜெபத்துடன் அவற்றை பாதுகாத்துக் கொள்ளுங்கள். வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

தேவனே! எனது அதிகமான மகிழ்ச்சியே நீங்கள் தான். உங்களுக்குப் பிரியமான தேவ பிள்ளையாக ஜீவிக்க உங்களிடம் பெற்றுக் கொண்ட இந்த மகிழ்ச்சியை பாதுகாத்துக் கொள்ள எனக்கு உதவி செய்யுங்கள். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை. இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்." (1 பேதுரு 2:10)

ஜீவ மன்னா

செப்டெம்பர்

10 சனி

தேவ வசனங்களின்
ஆசீர்வாதங்களை
உரிமையாக்கிக்
கொள்ளுங்கள்!

வேதவாசிப்பு

யாத்திராகமம்
அதி: 10–11

**“இதோ, நான் அவர்களுக்குச் சவுக்கியமும் ஆரோக்கியமும் வரப்பண்ணி, அவர்களைக் குணமாக்கி, அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும் சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்.”** (எரேமியா 33:6)

பிரியமானவர்களே! **ஜீவிக்கின்ற இயேசுகிறிஸ்துவின் வல்லமையான நாமத்தில் உங்களுக்கு நன்மையான காரியங்கள் இன்றைய நாளில் நடந்தேறும்படியாக பிரார்த்திக்கின்றேன்.** தேவனின் திருக்குமாரனாக எங்கள் இரட்சகராக இயேசுகிறிஸ்து உலகில் அனைத்து **மனிதர்களையும் பாவத்தினின்று மீட்கவும் சமாதானத்தைக் கொடுக்கவும் சிலுவையில் தன் வாழ்வை அர்ப்பணித்தார். ஏனென்றால் மனிதனது தகுதிகளைப் பாராது தேவன் எல்லா மனிதரையும் ஒரே விதமாக நேசிக்கின்றார். தேவனின் சமாதானத்தை அதிகமதிகமாக உங்கள் மீது பொழிகின்றார்.**

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட **எரேமியா 33:6**இல் **“தேவன் இஸ்ரவேலருக்கு யூத ஜனங்களுக்கும் கூறுவது அவர்களுக்கு சவுக்கியமும், ஆரோக்கியமும் வரப்பண்ணி அவர்களுக்குப் பரிபூரண சமாதானத்தையும், சத்தியத்தையும் வெளிப்படுத்துவேன்”** எனக் கூறுகின்றார். இயேசுகிறிஸ்துவைக் காரணமாகக் கொண்டு இன்றும் அவரது சொந்த சம்பத்தாக உலகில் தேர்ந்தெடுத்து வேறு பிரித்து எங்களுக்கும் இந்த வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதங்கள் உரிமையாகும். தேவனை நேசித்து **அவரைச் சமீபித்து இணைந்து வாழ்வோருக்கு இயேசுகிறிஸ்துவே மூலக்காரணமாக இருப்பதனால் நிறைந்த சமாதானமும், சுகமும். நித்திய ஜீவனும் உரிமையாகும்.** உலகில் பெரும்பாலான மனிதர்கள் சொந்த பக்தி மார்க்கங்களினாலும், சம்பிரதாயங்களினாலும் ஈடுபட்டு அவர்கள் வாழ்வில் சமாதானம், சுகம். சந்தோஷத்தைப் பெற முயற்சிக்கின்றார்கள்.

தேவ பிள்ளைகளே! ஆனாலும் **“தேவன் அவர் பேரில் விசுவாசங் கொள்வோர் ஒருபோதும் வெட்கப்பட்டு போக மாட்டார்கள்.”** விலைக்கிரயமின்றி அவர்களுக்கு சுகம், சமாதானம், ஜீவனை உரிமையாக்கிக் கொடுக்கின்றார். தேவன் உலகைப் படைத்து ஆளுகை பண்ணும்படியாக மனுஷனை சிருஷ்டித்தார். மனிதர்கள் பெருகி பூமியை ஆண்டுக் கொள்ளுங்கள் என்றும் பூமியின் பலனைப் புசிக்கவும் அதிகாரங் கொடுத்தார். ஆகையால் **மனிதர்கள் சரீர ரீதியிலும், மானசீக ரீதியிலும் சுகம் பெற்று சமாதானத்துடன் வாழ்வதே தேவனின் பிரியமாயிருக்கிறது. தேவனின் வசனம் ஒருபோதும் பொய் உரைக்காது அது நிலையான காரியங்களை நடப்பிக்கும். நீங்கள் வசனத்தில் இருக்கும் ஆசீர்வாதங்களை உரிமையாக்கிக் கொள்ளுங்கள். மனமகிழ்ச்சியின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! இன்றைய நாளிலும் நீங்கள் என்னை சுகப்படுத்துகின்ற,
எனக்குச் சமாதானத்தைத் தருகின்ற தேவன் என்று வாக்குத்தத்தத்தைத்
தந்தவராகையால் ஸ்தோத்தரிக்கின்றேன். உங்கள் வசனங்களின்
ஆசீர்வாதங்களை உரிமையாக்கிக் கொள்ள ஒத்தாசை செய்யுங்கள்.
இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“என்னாலே உன் நாட்கள் பெருகும்; உன் ஆயுசின் வருஷங்கள் விருத்தியாகும்.” (நீதிமொழிகள் 9:11)

ஜீவ மன்னா
செப்டெம்பர்
11 ஞாயிறு

உங்கள் உத்தமத்தில் உங்களைத் தாங்கும் தேவன்!

வேதவாசிப்பு
யாத்திராகமம்
அதி: 12-13

**"நீர் என் உத்தமத்திலே என்னைத்தாங்கி, என்றென்றைக்கும் உம்முடைய சமுகத்தில் என்னை நிலைநிறுத்துவீர்."** (சங்கீதம் 41:12)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் இன்றைய நாளில் பரத்திலிருந்து வரும் ஞானத்தால் நீங்கள் நிரப்பப்பட வேண்டுமென வாழ்த்துகிறேன்.** இந்தக் காலைப் பொழுதிலே மன்னாவின் மிகுதியான பகுதியை வாசிக்க முன்பதாக **நீங்கள் கண்களை மூடி சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் நேர்மையான ஒரு மனிதரா?** என்று சில வேளைகளில் **நீங்கள் மிகவும் நேர்மையானவர் என நினைக்கக் கூடும். இல்லாவிடின் நான் எப்படியும் நேர்மையற்ற ஒரு மனிதன் என நீங்கள் எண்ணலாம்.**

தேவ பிள்ளைகளே! இன்று சமுதாயத்தில் ஈடுபடுகின்ற காரியங்களின் பிரகாரம் யாருக்குமே உண்மையுள்ளவராக வாழ முடியாதென நீங்கள் எண்ணலாம். இருந்தாலும் **தேவ பிள்ளைகளே முதல் அல்லது சொத்துக்கள், ஆண் பெண் என்ற இருபாலாரின் சம்பந்தங்களில் எங்கள் கௌரவம், நீதி சம்பந்தமான காரியங்களில் எமக்கு உண்மையுள்ளவராக வாழ முடியாதிருக்கிறது.** ஆகையால் இவையனைத்தும் நேர்மையாக பெற்றுக் கொள்வதற்காக இயலாமற் போகின்ற தருணங்களில் வஞ்சனை மார்க்கங்களில் பெற்றுக் கொள்ள முயற்சி செய்கிறார்கள். அப்படியும் இல்லாவிட்டால் **உங்கள் நேர்மையான குணத்தை அறிந்து விலகிப் போய் விடுவார்கள். ஆனாலும் நீங்கள் உத்தமமாக செயல்படும் போது சங்கீதம் 41:12இல் கூறப்படுவது யாது? சற்று சிந்தித்துப் பாருங்கள்.** நீங்கள் உத்தமராயிருக்கின்ற போது உங்களைத் தாங்கிக் கொள்வது தேவனே! **"உங்கள் உத்தம செயல்களினால் தேவன் உங்களுக்கொரு வாக்குத்தத்தமளிக்கின்றார். என்றென்றைக்கும் அவருடைய சமுகத்தில் உங்களை நிலை நிறுத்துவதாகவே"** ஆகும்.

தேவ பிள்ளைகளே! இயேசுகிறிஸ்துவை நீங்கள் இரட்சராக ஏற்றுக் கொண்டிருந்தால், **அவர் தனது திரு இரத்தத்தினால் உங்களை பரிசுத்தப்படுத்தியிருப்பின். உங்கள் வாழ்வில் எல்லா வேளையிலும் அவருக்கே முதலிடம் கொடுப்பீர்களானால் ஒவ்வொரு நாளிலும் அதிகாலைப் பொழுதினில் அவருடைய முகத்தை ஜெபத்தில் தரிசிப்பவராகில் இயேசுகிறிஸ்துவின் நீதியின் நிமித்தம் உங்கள் உள்ளத்தில் உத்தமம் உருவாகும்.** அதை யாராலும் அசைக்க முடியாததோடு, அந்த உத்தமம் தேவனண்டை நெருங்கி ஜீவிக்கச் செய்யும். அப்பொழுது உங்கள் வாழ்வில் ஆசீர்வாதங்கள் பெருகி ஓடும். நீங்கள் வாழ்கின்ற சமுதாயமானது உங்களை மேன்மையானவராக ஏற்றுக் கொள்ளும். உங்கள் நேர்மையைக் குறித்து அனைவரும் பேசிக் கொள்வார்கள். **தேவனே உங்கள் வாழ்வில் வழியாக, ஒளியாக முன் செல்வார். வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் தேவனே! நான் உத்தமனாக ஜீவிப்பதைக் காண்பதையே நீங்கள் பிரியமுள்ளவராக இருப்பதை நான் காண்கிறேன். அப்பொழுது எல்லா உபத்திரவங்களில், வேதனைகளில் என்னைத் தாங்கி மீட்டு என்றென்றைக்கும் உங்கள் சமுகத்தில் வைத்திருப்பதால் ஸ்தோத்திரம்! இயேசுவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவரை நித்திய ஆசீர்வாதங்களுள்ளவராக்குகிறீர்; அவரை உம்முடைய சமுகத்தின் மகிழ்ச்சியினால் பூரிப்பாக்குகிறீர்." (சங்கீதம் 21:6)

ஜீவ மன்னா
செப்டெம்பர்
12 திங்கள்

சதா காலங்களிலும்
நம்மை வழி நடத்தும்
தேவன்!

வேதவாசிப்பு
யாத்திராகமம்
அதி: 14–15

**"இந்தத் தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்."** (சங்கீதம் 48:14)

பிரியமானவர்களே! **இருக்கிறவரும், இருந்தவரும், வருகிறவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தர் ஜீவனுள்ளவராய் இன்றைய நாளிலும் உங்களை வழி நடத்த வாழ்த்துகின்றேன். எங்களைச் சிருஷ்டித்த தேவன் எங்களைக் கைவிடாத ஒரே வல்லமையான தேவனாக இருக்கின்றார்.** ஏனென்றால் **எரேமியா 31:3**இல் **"அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன். ஆதலால் காருண்யத்தால் உன்னை இழுத்துக் கொள்கிறேன்"** என எழுதப்பட்டுள்ளது.

தேவ பிள்ளைகளே! **இன்றைய நாளிலும் இந்த தேவ வசனத்தை வாசிக்கின்ற உங்கள் அனைவரின் உள்ளத்திலும் தைரியம் ஏற்படுகிறதல்லவா?** ஏனென்றால் தேவன் எங்களை உலகில் தேர்ந்தெடுத்து வேறு பிரித்து எங்களைத் தம்மிடம் அழைத்து **அவருடைய சொந்த பிள்ளைகளாக்கிக் கொண்டார்.** தேவன் மனிதரல்லாதபடியால் அவரது வசனம் சத்தியமாகும். ஆகையால் **தேவன் தற்போது தொடக்கம் எமது வாழ்வில் இறுதி வரை எங்களோடு இருக்கின்றவர் என்றும் அவர் ஒரு போதும் எம்மைக் கைவிடார் என்றும் உறுதியான விசுவாசத்தோடிருக்க முடியும்.** இன்னுமாக பரிசுத்த வேதாகமத்தில் **1 தெசலோனிக்கியர் 5:24**இல் **"உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர் அவர் அப்படியே செய்வார்"** என எழுதப்பட்டுள்ளது. ஆகையால் **நீங்கள் உள்ளங் கலங்காதீர்கள்!**

தேவ பிள்ளைகளே! **உலக மனிதர்கள் எம்மைக் கைவிடலாம். எங்கள் பெற்றோர், சகோதர, சகோதரிகள், கணவன், மனைவி பிள்ளைகள், உற்றார், உறவினர் அனைவரும் எம்மைக் கைவிடலாம்.** ஆனாலும் மனிதனைச் சிருஷ்டித்தவராகிய நமது தேவன் எங்கள் வாழ் நாள் முழுவதும் எம்மோடு இருப்பதாக பொருத்தனை பண்ணுவாராகில் அது எவ்வளவு மேன்மையான காரியம்? இப் பூமியில் நாம் ஜீவிக்கின்ற காலத்திற்குள் மாத்திரமின்றி **எங்கள் மரணத்தின் பின்னரும் எங்களோடிருப்பதாக வாக்களித்திருக்கின்றார்.** ஏனென்றால் தேவனின் திருக் குமாரனான எங்கள் இரட்சகர் இயேசுகிறிஸ்து எங்கள் ஆத்துமாவிற்கு ஜீவனைப் பெற்றுத் தந்து எங்கள் மரணத்தின் பின்னர் பரலோக இராஜ்யத்திற்கு அழைத்துக் கொண்டு செல்வார். **தேவனது சமூகத்தில் எம்மை வைத்துக் கொள்வார். ஆகையால் இப்படியான தேவனொருவரோடு இருக்கின்றமையால் பயப்படாதீர்கள்! ஆசீர்வாதத்தின் நாள்!**

ஜெபம்

என் இயேசுவே! சதாகாலமும் ஒரே தேவனாக இருக்கின்றீர்கள். இன்றும், நாளையும் எனது வாழ்வில் இறுதி வரை நீங்கள் என்னோடிருக்கின்ற தேவன் என்பதால் உங்களை விடாதபடி பற்றிக் கொள்ள கிருபைச் செய்யுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகாலமுதற்கொண்டும் அறிவிக்கிறேன்; என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன் என்று சொல்லி,"
(ஏசாயா 46:10)

ஜீவ மன்னா
செப்டெம்பர்
13 செவ்வாய்

# உங்கள் கைகளின் கிரியைகளை உறுதிப்படுத்தும் தேவன்!

வேதவாசிப்பு
யாத்திராகமம் அதி: 16–17

**"எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள்மேல் இருப்பதாக; எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும்; ஆம், எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தியருளும்."** (சங்கீதம் 90:17)

அன்பான தேவ பிள்ளைகளே! பூமியின் நியாயாதிபதியாய் வரப் போகும் **எங்கள் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் எங்களை வாழ்த்துகின்றேன்.** மோசேயின் தேவன் ஆகிய இஸ்ரவேலின் தேவனானவர் இன்றும் என்னோடும், உங்களோடும் இருக்கின்றார். மேலே கூறப்பட்ட பிரதான தேவ வசனத்தில் குறிப்பிடப்படுகின்றதாவது மோசே தீர்க்கதரிசியின் ஜெபத்தில் ஒரு பகுதியாகும். அங்கே அந்த தேவ மனிதர் கூறுவது **"எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள் மேல் இருப்பதாக, எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும்"** என்றாகும்.

தேவ பிள்ளைகளே! ஆகையால் **நீங்கள் கலங்காதீர்கள்!** இன்றும் தேவன் ஜீவிக்கின்றவராக வாசம் பண்ணுவதால் எங்கள் கைகளின் கிரியையை உறுதிப்படுத்த இன்றும் கிரியை செய்துக் கொண்டிருக்கிறார். **"மோசேயின் தேவன் இஸ்ரவேல் ஜனங்களின் இரு கரங்களையும் ஆசீர்வதிப்பதாக" உபாகமம் 28:8இல் பொருத்தனை பண்ணினார். "கர்த்தர் உன் களஞ்சியங்களிலும் நீ கையிடும் எல்லா வேலையிலும் உனக்கு ஆசீர்வாதம் கட்டளையிடுவார். உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கும் தேசத்திலே உன்னை ஆசீர்வதிப்பார்."** எனக் கூறினார். நீங்களும் நானும் இஸ்ரவேலரைப் போல் அவரது சொந்த ஜனங்களாகையாலும் உலகில் வேறு பிரித்துக் கொண்டுள்ளமையாலும் எங்களுக்கும் இந்த வாக்குத்தத்தம் உரிமையாகின்றது. ஆனாலும் ஆத்மீக தேவ பிள்ளைகளான நீங்களும், நானும் எங்கள் முழுக் கவனத்தையும் செலுத்த வேண்டிய ஒரு விஷேசித்த காரியமாகும்.

தேவ பிள்ளைகளே! தேவன் **ஆறு நாட்களுக்குள் வானத்தையும், பூமியையும் அங்கு வாழும் அனைத்து உயிரினங்களையும் சிருஷ்டித்து முடித்து விட்டார். தேவன் தாமே தனது சொந்த கரக்கிரியைகளை ஏழாம் நாளில் செய்து முடித்து விட்டார்.** தேவன் படைத்த, சிருஷ்டித்த சொந்த கைக் கிரியைகளில் ஏழாம் நாள் ஓய்வு பெற்றாராகையால் அந்த நாளை ஆசீர்வதித்து பரிசுத்தமானதென நியமித்தார் என்பதால், அன்று எந்தவொரு வேலைகளிலும் ஈடுபடாது **அந்நாளை முழுவதும் தேவனுக்காக அர்ப்பணிக்க வேண்டும். அப்போது 6 நாட்களுக்குள் உங்கள் கரங்களை இருமடங்காக ஆசீர்வதித்து கைகளின் பிரயாசத்தை உறுதிப்படுத்துவார். வெற்றிகரமான நாள்!**

ஜெபம்

என் தேவ பிதாவே! நீங்கள் என் கரங்களை இருமடங்காக ஆசீர்வதிக்கின்ற தேவனாவீர்கள் நான் 6 நாள் வேலை செய்து உங்கள் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள உதவி செய்யுங்கள். இயேசுவின் நாமத்தில்.

~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக; அவரே உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்த தம்முடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்தும்படி, இந்நாளில் உனக்கு உண்டாயிருக்கிறதுபோல, ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறவர்." (உபாகமம் 8:18)

ஜீவ மன்னா

செப்டெம்பர்

**14** புதன்

# மகத்துவமான கிரியைகளைச் செய்யும் தேவன்!

வேதவாசிப்பு

யாத்திராகமம்
அதி: 18-19

**"கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணுங்கள், அவர் மகத்துவமான கிரியைகளைச் செய்தார்; இது பூமியெங்கும் அறியப்படக்கடவது என்பீர்கள்."** (ஏசாயா 12:5)

நேற்றும், இன்றும், என்றும் மாறாத தேவனின் பிள்ளைகளாக வேறுபிரிக்கப்பட்ட அன்பான தேவ பிள்ளைகளே! **தேவனுக்குப் பயந்து ஜீவிக்கின்ற உங்கள் வாழ்வில் செழிப்பைக் கொடுத்து ஆசீர்வதிக்கும்படியாக இன்றைய நாளில் வாழ்த்துகின்றேன். இன்றைய நாளில் உங்கள் காரியங்கள் அனைத்தும் வெற்றியாக சந்தோஷத்துடன் நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாயிருப்பது,** தேவன் பேரில் விசுவாசங் கொள்வோரை அவர் கைவிடாதபடியினாலேயாகும்.

தேவ பிள்ளைகளே! தேவ வசனத்தில் எழுதியிருப்பது ***கர்த்தரைக் கீர்த்தனம் பண்ணுங்கள். அவர் மகத்துவமான கிரியைகளைச் செய்தார்.*** இது பூமியெங்கும் அறியப்படக்கடவது என்பீர்கள் என்றாகும். தேவன் முழு உலகிலும் **உன்னதமான தேவன் என்பது இதிலிருந்து புலனாகின்றது. தேவன் எவ்வளவு மகத்துவமுள்ளவரான தேவனாயிருப்பினும் சிறிய மனிதர்களான ஒவ்வொருவரையுங் குறித்து மிகவும் கிரிசனையுள்ளவராகவிருக்கின்றார்.** பெற்றோர் தனது பிள்ளைகள் மீது எவ்வளவாக கரிசனைக் கொள்கிறார் என்பதை நாம் அறிவோம். தனது பிள்ளைகளின் முகம் சோர்ந்து போய் அவர்கள் துக்கமாக சோகத்தோடு இருப்பதைக் கண்டால் **அவர்களுக்கு என்ன பிரச்சினை? காரணமென்ன? என்பதைத் தேடி அவைகளை நிறைவேற்றிக் கொடுத்து அவர்களை மீண்டுமாக சந்தோஷமாக வைக்க செயல்படுவார்கள்.** பெற்றோர்கள் பிள்ளைகளது சந்தோஷத்தைக் குறித்து சிந்தித்து பெரும்பாலானவைகளைச் செய்வார்களாகில் பரலோகத் தேவன் அதற்கும் மேலாக செயல்படமாட்டாரா?

தேவ பிள்ளைகளே! **எங்கள் ஆத்துமாவைக் குறித்தும், வாழ்வைக் குறித்தும் சிந்திக்கின்ற பரலோக தேவன் எங்கள் ஆத்துமாவை பாதுகாத்து எங்களுக்கு நித்திய ஜீவனை நோக்கிக் கொண்டு செல்லவும், எங்கள் காரியங்களை வாய்க்கப் பண்ணவும் எங்கள் உள்ளத்தை சந்தோஷமாக வைக்கவும் செயல் புரிகின்றார்.** எங்கள் தேவனானவரும் தேவனுக்கும் பிரியமான வாழ்கின்ற அனைத்து பிள்ளைகளினதும் விருப்பங்களை நிறைவேற்றும் தேவன் மகத்துவமானவர் என்பதை இப்பூலோக முழுவதும் அறியப்படும். உயர், கல்வி அல்லது பரம்பரையாக சொந்தமாகும் **உடமைகள் இல்லாத போதும் வேலை தேடி கொழும்பிற்கு வந்த என்னை வல்லமையான தேவ ஊழிக்காரனாக்கியது. என் வாழ்வை ஆசீர்வதித்தது தேவனின் மகத்துவமான கிரியையே உங்களுக்கும் அவ்வண்ணமேயாகும். வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

என் தேவனே! இவ்வுலகில் மகத்துவமானவர் நீங்களே உங்கள் கிரியைகள் புதுமையானவைகளாய் அளவற்றவைகளுமானவைகள். அதற்கு நிகரானவைகள் இவ்வுலகில்லை இன்றும் உங்கள் உன்னத கிரியைகள் எனக்குள் நிறைவேற்றி நீங்கள் மகிமைப்பட வேண்டுமென இயேசுவின் நாமத்தில்.

~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அதைச் செய்து நிறைவேற்றி, ஆதிமுதற்கொண்டு தலைமுறைகளை வரவழைக்கிறவர் யார்? முந்தினவராயிருக்கிற கர்த்தராகிய நான்தானே; பிந்தினவர்களோடும் இருப்பவராகிய நான் தானே." (ஏசாயா 41:4)

ஜீவ மன்னா

செப்டெம்பர்

15 வியாழன்

**நன்மையால் உங்கள் வாயைத் திருப்தியாக்கும் தேவன்!**

வேதவாசிப்பு

யாத்திராகமம் அதி: 20–21

**"நன்மையினால் உன் வாயைத் திருப்தியாக்குகிறார்; கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயதுபோலாகிறது."** (சங்கீதம் 103:5)

அருமையான தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் இன்றைய நாளில் தேவ அன்பும், தேவ பயமும் உங்களை வழி நடத்தும்படியாக வாழ்த்துகின்றேன்.** சிருஷ்டித்த தேவனை அறிந்து அவரின் ஆசீர்வாதங்களைப் பெற்று அநுபவிக்கின்ற **நீங்கள் மிக அதிர்ஷ்டசாலிகள்!** நீங்கள் மாத்திரமின்றி அவரைக் குறித்தறிந்துக் கொள்ளும் அனைவருக்கும் தேவனது ஆசீர்வாதங்கள் உரிமையாகின்றமையால் அனைவரும் **அதிர்ஷ்டசாலிகள்!**

தேவ பிள்ளைகளே! மேலே கூறப்பட்ட தேவ வசனத்தின்படி தேவ பிள்ளைகளாகிய **"எங்கள் வாயை தேவனுடைய நன்மையால் திருப்தியாக்குகிறார்"** என்றெழுதப்பட்டுள்ளது. **"விரியன் பாம்புக் குட்டிகளே நீங்கள் பொல்லாதவர்களாயிருக்க நலமானவைகளை எப்படிப் பேசுவீர்கள்? இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் என்றும் நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக் காட்டுகிறான். பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக் காட்டுகிறான்."** தேவனின் சத்திய வசனங்கள் **(பரி.மத்தேயு 12:34,35)** இயேசுகிறிஸ்து எங்களுக்கு கூறியவைகளே ஏனென்றால் உலகில் அனைத்து மனிதர்களினதும் வாழ்வில் அந்தரங்க இரகசியங்களைக் குறித்தும், மற்றும் வாழ்வின் ஆசீர்வாதங்கள். இன்னுமாக வேதனை, பிரச்சினைகள் இவைகளைக் குறித்தும் இன்னுமொரு மனிதன் அறிந்துக் கொள்ள முடிவது அவனது வாய் மூலமே என்பதை நாம் அறிவோம்.

தேவ பிள்ளைகளே! **உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூட முடியாதென்று ஒரு பழமொழியுண்டு.** நாங்கள் பெரும்பாலாக இதைக் கேட்டிருக்கின்றோம். தேவ வசனத்தில் கூறுவது **"தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான்"** தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனே கலக்கமடைவான் என **நீதிமொழிகள் 13:3**இல் காண்கிறோம். ஆனாலும் **தேவ பிள்ளைகளது வாழ்வில் தேவன் இடைபடுவதால் அவர்களது வாயின் வார்த்தைகள், இருதய சிந்தனைகள் என்பவற்றை பாதுகாத்துக் கொள்வார்.** அது மாத்திரமின்றி தேவன் நல்லவர் என்பதால் **தேவனது தேவ ஆவியானவர் அவர்களுக்குள் வாசம் பண்ணுவதால் நன்மையான வசனங்களைப் பேசவும், மற்றவர்களுக்கு ஆசீர்வாதம் கிடைப்பதற்காக தேவ வசனத்தைக் குறித்துப் பேசவும் வாயை பாவிப்பார்.** நீங்கள் உலகில் எடுத்துக் காட்டாகத் திகழும் மனிதனாகவும், உங்களுக்குள் வாசம் பண்ணும் **தேவ ஆவியானவர் உங்கள் வாயை பாவிக்கும்படியாகவும் தேவனுக்குக் கீழ்படியுங்கள். ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் நல்லவர் என்பதால் நீங்கள் என்வாயை நன்மையினால் திருப்திப்படுத்துவீர்கள் என்பதை அறிந்துக் கொண்டேன். நீங்கள் தேவ ஆவியானவருக்கூடாக இன்றும் எனது வாயை நன்மையால் திருப்திப்படுத்துங்கள். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அவனவன் தன் தன் வாயின் பலனால் திருப்தியடைவான்; அவனவன் கைக்கிரியையின் பலனுக்குத்தக்கதாக அவனவனுக்குக் கிடைக்கும்." (நீதிமொழிகள் 12:14 )

ஜீவ மன்னா
செப்டெம்பர்
16 வெள்ளி

உங்கள் ஆத்துமா
தேவனால்
உயிர்ப்பிக்கப்படும்!

வேதவாசிப்பு
யாத்திராகமம்
அதி: 22-23

**"என் ஆத்துமா மண்ணோடு ஒட்டிக்கொண்டிருக்கிறது; உமது வசனத்தின்படி என்னை உயிர்ப்பியும்."** (சங்கீதம் 119:25)

பிரியமான தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தினால் ஜெயம் தரும் நந்நாளாக அமையும்படியாக வாழ்த்துகின்றேன்.** இன்றைய நாளில் முதன் முதலாக இவ் ஜீவ மன்னா நாளிதலை வாசிப்பவராக இருப்பினும், உங்கள் தராதரம் எப்படியானதாய் இருந்தாலும், இந்நாளிலே **நீங்கள் உங்களை உண்டாக்கிய படைப்பின் தெய்வத்தை விசுவாசித்து, உங்கள் வாழ்வினை இயேசுகிறிஸ்துவின் நாமத்தின் மூலமாக அவர் கரத்திலே அர்ப்பணிப்பீர்களேயானால் இன்று முதல் நீங்கள் ஆசீர்வாதம் பெற்றவர்களாக விளங்குவீர்கள்.**

தேவ பிள்ளைகளே! **பிரசங்கி 12:7**இல் கூறுகிறார். இவ்விதமாய் **"மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்கு முன்னும், அவரை உன் வாலிபப் பிராயத்திலே நினை"** என்பதாக. ஆதி மனிதர்களான ஆதாம், ஏவாளை கர்த்தர் பூமியின் மண்ணினாலே உருவாக்கினபடியால் மனித உடல்களை மண்ணான பூமிக்கே திரும்பும் எனக் கூறப்பட்டுள்ளது. **மாம்ச பிரகாரமான மனித சரீரம் பூமிக்குரிய காரியங்களால் ஈர்க்கப்படுகின்றது. இது மனிதர்களின் பொதுவான ஒரு செய்கையாகும்.** ஆயினும் தேவ பிள்ளைகளுக்கு **மாம்ச இச்சைகளையும், உலக இச்சைகளையும் தேவ ஆவியானவருடைய வல்லமைக்கூடாய் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர தேவ அநுக்கிரகம் தடையின்றி கிடைக்கும்.**

தேவ பிள்ளைகளே! **உலக மனிதர்களுக்கு இவ் வரப்பிரசாதம் இன்மையால், இவற்றால் வரும் நன்மையை, அல்லது தீமையை பெற வாஞ்சித்து அவைகளுக்கு பின்னால் செல்கிறார்கள்.** இதன் முடிவு அழிவாய் மாறுகிறது. ஆயினும் நீங்கள் பயப்படாதிருங்கள். ஏனெனில் நீங்கள் தேவ பிள்ளைகளாக இருப்பதால் **அதிர்ஷ்டசாலிகளாக இருக்கிறீர்கள்.** இப்புவியில் வாழ்வதால் இவைகளை எந்நேரமும் நாம் காணக் கூடியதாகவும், கேட்கக் கூடியதாகவும் இருக்கிறது. **சாத்தான் இல்லாதவற்றை காண்பித்து அதன் மூலமாக மனக் கஷ்டத்தை உண்டு பண்ணி வீழ்த்திவிடுவான். ஆகையால் நீங்கள் அவனுக்கு இடமளியாது ஜெபியுங்கள். இயேசுகிறிஸ்து தம் சொந்த ஆவியின் மூலம் உங்கள் ஆத்துமாவை உயிர்ப்பித்து, அவரது வாக்குறுதிகளை நினைவுப்படுத்தி அவற்றை பெற்றுக் கொள்ள வழி காட்டுவார். வெற்றித் தரும் நாள்!**

ஜெபம்

எங்கள் ஆத்துமாவை உயிர்ப்பிக்கும் அன்பான தேவனே! உலக காரியங்கள் மூலமாக என் இருதயத்தை வேதனைக்குட்படுத்தி சோர்வடையச் செய்ய முயற்சிக்கும் சாத்தானை முறியடித்து தேவ ஆவியால் என் ஆத்துமாவை நிரப்பி உயிர்ப்பிக்கும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அதினாலே பூமியிலே தன்னை ஆசீர்வதிக்கிறவன் சத்திய தேவனுக்குள் தன்னை ஆசீர்வதிப்பான்;..."
(ஏசாயா 65:16)

ஜீவ மன்னா

செப்டெம்பர்

**17** சனி

## கர்த்தர் நியமித்ததை யாராலும் மாற்ற முடியாது!

வேதவாசிப்பு

யாத்திராகமம் அதி: 24-25

**"அவைகள் திரும்பவும் வந்து பூமியை மூடிக்கொள்ளாதபடி கடவாதிருக்கும் எல்லையை அவைகளுக்கு ஏற்படுத்தினீர்."** (சங்கீதம் 104:9)

அன்பார்ந்த தேவ ஜனங்களே! உன்னதமான தேவன் **இயேசுகிறிஸ்துவின் நாமத்தின் வல்லமையால் உங்கள் வாழ்வில் காணப்படும் சகல சவால்களிலும் ஜெயம் கிடைப்பதாக என வாழ்த்துகின்றேன்.** எங்கள் தேவனாகிய கர்த்தர் எத்தனை வல்லமை பொருந்தியவர் என்பதை **சற்று சிந்திப்போமாகில் காரணமற்ற பயங்களெல்லாம் எம்மை விட்டு நீக்கி விடும் சர்வ பராக்கிரமுள்ள சிருஷ்டிப்பின் தேவனாயிருக்கிறார்.**

எனக்கருமையான தேவ பிள்ளைகளே! நாம் அநேகமாக எம் ஓய்வு நேரத்தை செலவிடும்படியாக கடற்கரையை நாடுகிறோம் அல்லவா? ***கரை காண முடியாத மகா சமுத்திரத்தை நோக்கி பார்த்துக் கொண்டே இருக்கலாம். அவ்வேளை எம் உள்ளத்திற்குள் புத்துணர்ச்சியை பெற்றுக் கொள்ளலாம். மகா சமுத்திரங்களை உருவாக்கினவர் யார்?*** அது எங்ஙனம் உருவாக்கப்பட்டது என எண்ணிப் பார்ப்போமாகில் அந்த தீர்மானத்தை குறித்து ஒன்றுமே எமக்கு புலப்படாது. ஓயாது கடற்கரையை நோக்கி புரண்டோடிவரும் கட்டுக்கடங்காத கடல் அலைகளின் அசைவு எத்தனை அற்புதமுள்ள அழகான காட்சியாயிருக்கிறது. இது எப்படியென்று எண்ணிப் பார்க்க முடியாமல் இருக்கிறது. இன்றைய எம் பிரதான தேவ வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது ***கடலை நிர்மாணித்தவர் எம்மைச் சிருஷ்டித்த கர்த்தரே என்றல்லவா? கடல் அலைகள் பேரிரைச்சலோடு வேகமாய் கரையை நோக்கி வந்த போதும் கடற் கரையின் எல்லையை கடவாதபடி வேகம் சிறிது சிறிதாக குறைந்து போவதை நாம் காண்கிறோம்.***

தேவ பிள்ளைகளே! ***அது மாத்திரமல்ல மறுபடியும் சமுத்திரத்தை நோக்கி கடந்து போய் மறைகிறதல்லவா?*** அதையே இன்று அவைகள் திரும்பவும் வந்து பூமியை மூடிக் கொள்ளாதபடி கடவாதிருக்கும் எல்லையை அவைகளுக்கு ஏற்படுத்தினீர் என பிரதான வசனத்தில் எழுதப்பட்டுள்ளது. உலகத்தை கர்த்தர் உருவாக்கிய போது அவர் சமுத்திரத்திற்கு நியமித்த எல்லையை மீறாதபடி கடல் அலைகள் செயல்படுகின்றன. ஆகவே ***கர்த்தர் நியமித்த இயற்கைக் காரியங்கள் அப்படியாகவே நடந்துக் கொண்டிருக்கிறதென்றால் அவரது சாயலாக உருவாக்கப்பட்ட எம்மைக் குறித்து அவர் நியமித்ததை மாற்ற யாரால் கூடும்?*** ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உங்களை தம்மிடம் அழைத்து உங்கள் வாழ்வின் எதிர்பார்ப்புகளை நியமித்து அவைகளை ஏற்ற வேளையிலே நிறைவேற்றி ஆசீர்வதிப்பதற்காகவே! அவரது செயல்களுக்கு விரோதமாக எதிர்த்து நிற்க யாராலும் முடியாது. ஆகையால் பயப்படாதிருங்கள்! இன்று உங்களை ஆசீர்வதிக்கும் **ஆசீர்வாதத்தின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! நீங்கள் நியமித்தவைகளை யாராலும் மாற்ற முடியாது. நீங்கள் என்னைக் குறித்து நியமித்திருக்கிற காரியங்கள் அப்படியே நிறைவேறும் என்பதை நான் அறிவேன். ஏற்ற நேரத்தில் அவைகளை என் வாழ்வில் நிறைவேற்றி ஆசீர்வதிக்குமாறு இயேசுகிறிஸ்துவின் நாமத்தில். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"இதுவும் சேனைகளின் கர்த்தராலே உண்டாகிறது; அவர் ஆலோசனையில் ஆச்சரியமானவர், செயலில் மகத்துவமானவர்." (ஏசாயா 28:29)

ஜீவ மன்னா
செப்டெம்பர்
18 ஞாயிறு

# உங்கள் வாழ்விலே அதிசயங்களைக் காணச் செய்வார்!

வேதவாசிப்பு
யாத்திராகமம்
அதி: 26-27

**"கர்த்தர் வெண்கலக் கதவுகளை உடைத்து, இரும்புத் தாழ்ப்பாள்களை முறித்தாரென்று,"** (சங்கீதம் 107:5)

தேவனுக்குள் பிரியமானவர்களே! ஜீவனுள்ளவரும் கிரியை செய்கிறவருமான **இயேசுகிறிஸ்துவின் தூய நாமத்தினால் இன்றும் நன்மையான சவுகளை உரிமையாக்கிக் கொள்ள வாழ்த்துகிறேன்!** அளவில்லாமல் எம்மீது அன்பு செலுத்துகிறவரும், ஆபத்துகளில் எம்மை பாதுகாக்கிறவரும் **எம் துன்ப துயரங்களில் எம்மோடிருந்து ஆறுதல் தருகிறவருமான ஜீவிக்கின்ற தேவன் இன்றும் உங்களோடிருக்கிறார்.** ஆகையால் எதைக் குறித்தும் **கலங்காதிருங்கள்!**

இன்றைய எம் முதல் வசனம் கூறுகிறது **"கர்த்தர் வெண்கலக் கதவுகளை உடைத்து இரும்புத் தாழ்ப்பாள்களை முறித்தாரென்று."** இதன் பிரகாரமாக **"அவர் எண்ணிப் பார்க்க முடியாத அற்புதங்களையும், ஆராய்ந்து முடியாத அதிசயங்களையும் செய்ய வல்லவராயிருக்கிறார்."** ஆகவே அவர் ஜீவனுள்ள தேவனாயிருந்து செயல் புரிந்துக் கொண்டிருக்கிறார். இன்றைய நாளிலும் **நீங்கள் என் வாழ்விலே அதிசயமானவைகளை செய்ய வல்லமையுள்ளவராயிருக்கிறார்.** சிறையிலடைக்கப்பட்ட இயேசுவின் பிரதான சீஷரான பேதுருவின் நிமித்தம் தேவ சபையில் ஊக்கமான ஜெபம் தேவனை நோக்கி ஏறெடுக்கப்பட்டது. **"அதைக் கேட்ட தேவன் ஒரு தூதனை சிறைக்கு அனுப்பி கைகள் கட்டப்பட்டிருந்த சங்கிலிகளை அகற்றி சிறைக் கதவுகளை திறந்து வெளியே கொண்டு வந்தார். பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு இரண்டு சேவகர் நடுவே நித்திரை பண்ணிக் கொண்டிருந்தான்"** என்பதாக **அப்போஸ்தலர் 12:6**இல் கூறுகிறது.

தேவ பிள்ளைகளே! **"கர்த்தருடைய தூதன் பேதுருவை விலாவிலே தட்டி சீக்கிரமாய் எழுந்திரு என்று அவனை எழுப்பினான் உடனே சங்கிலிகள் அவன் கைகளிலிருந்து விழுந்தது......அவர்கள் முதலாங் காவலையும், இரண்டாங் காவலையும் கடந்து நகரத்திற்குப் போகிற இரும்புக் கதவண்டையிலே வந்த போது அது தானாகவே அவர்களுக்கு திறவுண்டது"** என்று எழுதப்பட்டுள்ளது. அன்று தம் ஊழியக்காரனாகிய பேதுருவை விடுதலை செய்தவர் **இன்றும் எமது வாழ்விலே காணப்படும் கட்டுகளை முறிக்க எம் எதிராளியான சாத்தானுடைய அரணகளைத் தம் தூதர்களைக் கொண்டு தகர்த்து வெண்கலக் கதவுகளை உடைத்து எம்மை விடுவிக்க வல்லவராயிருக்கிறார்.** எம்மை சிறைப்படுத்தும் சிறை இரும்புத் தாழ்ப்பாள்களை முறித்து அதிலிருந்து வெளி வரச் செய்ய அவரால் கூடும். தேவன் என்றும் மாறாதவராய் இருப்பதால் இன்றும் அவரது கிரியைகள் அப்படியே செயல்படுகிறது. **அநுக்கிரகத்தின் நாள்!**

ஜெபம்

எங்கள் வாழ்விலே அற்புதங்களையும், அதிசங்களையும் செய்ய வல்லமை மிக்க தேவனே! உமக்கு நன்றி! எங்கள் ஆத்மீக வாழ்விலும், லௌகீக வாழ்விலும் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் இரும்புத் தாழ்ப்பாள்களையும், வெண்கல கதவுகளையும் உடைத்து, எங்கள் வாழ்விலும் அற்புதங்களையும் அதிசயங்களையும் காண ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: அது இந்த ஜனத்தில் மீதியானவர்களின் பார்வைக்கு இந்நாட்களில் ஆச்சரியமாயிருந்தாலும், என் பார்வைக்கும் ஆச்சரியமாயிருக்குமோ என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்." (சகரியா 8:6)

ஜீவ மன்னா
செப்டெம்பர்
19 திங்கள்

உங்கள் இருதயங்களிலே தேவ பயத்தை உருவாக்கும் தேவன்!

வேதவாசிப்பு
யாத்திராகமம்
அதி: 28–29

**"அவர்களுக்கு நன்மைசெய்யும்படி, நான் அவர்களை விட்டுப் பின்வாங்குவதில்லையென்கிற நித்திய உடன்படிக்கையை அவர்களோடே பண்ணி, அவர்கள் என்னைவிட்டு அகன்று போகாதபடிக்கு, எனக்குப் பயப்படும் பயத்தை அவர்கள் இருதயத்திலே வைத்து."** (எரேமியா 32:40)

கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்ட தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இப்புதிய தினத்திலே நீங்கள் செய்கிற செயல்கள் யாவும் செழிப்படையவும் உள்ளங்களிலே மகிழ்ச்சி நிலவும்படியாகவும் வாழ்த்துகின்றேன்.** என்னையும், உங்களையும் ஒரே விதமாய் நேசிக்கிற ஆண்டவர் ஒரு போதும் எம்மைக் கைவிடார். **எம் பெலவீன நேரங்களில் தம் கிருபையை எமக்களித்து நம்மை பாதுகாக்கின்றார். அவரை எம் இரட்சகராய் ஏற்றுக் கொண்ட நாம் பாக்கியவான்களாவோம்!**

அன்பார்ந்தவர்களே! மேலே காணப்படும் வேத வாக்கியம் கூறுகிறது எமக்குள் தேவ பயம் இருப்பது மிக அவசியம் என்பதாக. அவர்களுக்கு நன்மை செய்யும்படி நான் அவர்களை விட்டுப் பின் வாங்குவதில்லையென்கிற **நித்திய உடன்படிக்கையை அவர்களோடே பண்ணி அவர்கள் என்னை விட்டு அகன்று போகாதபடிக்கு எனக்குப் பயப்படும் பயத்தை அவர் இருதயத்தில் வைத்துள்ளேன்** என எரேமியா தீர்க்கதரிசி மூலமாக இஸ்ரவேலருக்கு உரைத்துள்ளார். இன்றும் அவர் ஜீவனுடன் காணப்படுவதால் **இயேசுகிறிஸ்துவினால் அவரது சொந்த பிள்ளைகளாக உலகிலிருந்து வேறுபிரிக்கப்பட்ட நாம் தேவ பயமுள்ளவர்களாய் வாழ வேண்டுமென தேவன் எதிர்பார்க்கிறார். ஏனெனில் அவர் சதாகாலங்களிலும் மாறாதவராக இருக்கிறார்.**

பிரியமான தேவ பிள்ளைகளே! **தேவன் மீது நாம் கொண்டுள்ள பயமே எம் ஆத்மிக வழிப்பயணத்தின் வெற்றிக்கு வழி காட்டும் என்பது தெளிவாகிறது. பெற்றோருக்கு பயமுள்ள பிள்ளைகள் தவறு செய்யாதிருப்பது போல், நாம் எம் பரம பிதாவிற்கு பயந்து தவறு செய்யாத பிள்ளைகளாய் வாழ்வோம்.** அப்போது எம் வாழ்க்கை ஆசீர்வாதமானதாய் விளங்கும். **தேவனுக்குப் பயந்து கீழ்படிந்து நடப்போமாகில் அவருக்கு மிகப் பிரியமானவர்களாய் இருப்போம்.** ஆயினும் சில சந்தர்ப்பங்களில் மனிதர்களுக்குப் பயந்து தேவ வார்த்தைகளை மீறும் போது எம் வாழ்வின் ஆசீர்வாதத்திற்கு தடை ஏற்படும். மனுஷனுக்கு பயப்படுகிற பயம் கண்ணியை வருவிக்கும்......என **நீதிமொழிகள் 29:25**இல் எழுதப்பட்டிருக்கிறது. ஆகையால் **"ஒரு சிறிய காரியத்தில் தேவனுக்கு கீழ்படியாது போனோம் என உணருவீர்களேயானால் மன்னிப்பைக் கேட்டு ஜெபம் செய்யுங்கள்."** உங்களை மன்னித்து ஏற்றுக் கொள்வார். **சந்தோஷத்தின் நாள்!**

ஜெபம்

என் தேவனே! தேவ பயத்தை என் உள்ளத்திற்கு அருளுகிறவரான இயேசுவே நன்றி! இப் பூமியில் வாழும் காலம் வரை உமக்கு கீழ்படிந்து தேவ பயமுள்ளவர்களாய் வாழ்ந்து உலகத்திலே ஆசீர்வதிக்கப்பட்டவனாய் வாழ கிருபையருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வசனம்

"கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டைபண்ணுகிறார்கள்." (நீதிமொழிகள் 1:7)

ஜீவ மன்னா
செப்டெம்பர்
20 செவ்வாய்

உங்கள் உள்ளத்தில் கோபத்தை ஏற்படுத்துவது யார்!

வேதவாசிப்பு
யாத்திராகமம்
அதி: 30-31

**"...தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்;..."** (பரி.மத்தேயு 5:22)

அன்பான தேவ பிள்ளைகளே! கர்த்தருக்குள் பிரியமானவர்களே! **இயேசுகிறிஸ்துவின் நிகரில்லா நாமத்தினால் இன்றைய நாளிலே கோபதாபங்கள் நீங்கி அன்பின் பூரணத்துடன் மன மகிழ்ச்சியாய் வாழ வாழ்த்துகின்றேன்.** தேவ பிள்ளைகளே! **"உங்களில் ஏற்படும் கோபம் தேவனுக்கும், உங்களுக்கிருக்கும் நல் உறவை துண்டித்து விடும்."** ஏனெனில் கோபத்தின் அதிபதியாகிய சத்துருவானவனிடமிருந்தே எமக்குள் கோப உணர்வு வெளிப்படுகிறது. **அதன் மூலமாக சுற்று சூழல்களில் அநேக பிரச்சினைகளுக்கு, இன்னல்களுக்கு முகங் கொடுக்க நேரிடுகிறது. இது பிசாசின் கிரியைகளும், தந்திரமான காரியங்களுமாகும்.** ஆனாலும் அன்பை வெளிப்படுத்தி அன்பால் அரவணைப்பது அன்பிற்கு அதிபதியான சமாதானத்தின் தேவனாகிய சர்வ வல்லமையுள்ள பரலோக பிதாவேயாகும்.

தேவ கிருபை நிறைந்தவர்களே! எம் பிரதான திரு வார்த்தையின்படி உதயமான நாளில் தேவன் கூறுகிறார் **"நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்துவதற்கு முன் உன் இருதயத்திலிருக்கிற கோபத்தை அகற்றி விடும்படியாக"** அல்லவா? நீங்கள் கோபம் கொள்ளும் பொழுதெல்லாம் நியாந்தீர்ப்புக்கு ஏதுவாயிருக்கிறீர்கள் எனவும் வேத வார்த்தையை சுட்டிக் காட்டுகிறது. **தற்போதைய சமுதாயத்திலே ஒரு மனிதனுக்கு விரோதமாய் ஒரு மனிதன் கருமமாற்றுவது நாம் காண்கின்ற சாதாரண விடயமாகும்.** கோபம் என்னும் விதை சாத்தான் மூலம் மனித உள்ளங்களில் வெவ்வேறான சந்தர்ப்பங்களில் விதைக்கப்படுகிறது. **ஒருவன் நன்மைகளுடன் வாழ்வதைப் பார்க்க பிடிக்காது அந்த மனிதனுக்கு விரோதமாக செயல்படுவது போன்ற காரியங்கள் அநேகமாயிருக்கிறன. இவ்வகையான விரோத கிரியைகளில் ஈடுபடுவது கோபத்தின் காரணமாகவேயாகும்.**

தேவ பிள்ளைகளே! **கோபத்தைக் குறித்து இயேசுகிறிஸ்து எம் இருதயத்தின் ஆழத்தில் பேசுகிறார்.** நீங்கள் உள்ளாந்திரமாய் யாருடனாவது கோபமாய் இருக்கிறீர்களா? அப்படியாயின் அதன் பாதிப்பு உங்களுக்கே. ஏனெனில் **கோபத்தின் நிமித்தம் இரத்தக் கொதிப்பு ஏற்படுகிறது. கோபத்தின் காரணமாக நினைவுக்கு வரும் பொழுதெல்லாம் உக்கிரகம் அதிகரிக்கும். சரீரத்தின் சௌக்கியம் நீங்கி நோய்கள் ஏற்பட வாய்ப்புண்டு.** ஆயினும் எம் வேத வாக்கியங்களைத் தியானித்து கோபத்தை கை விட்டு அன்பாக கதைக்கும் போது நீங்கள் வேதனைப்படுவதில்லை. ஆகையால் எப்போதும் **அன்போடும், சமாதானத்தோடும் வாழப் பிரயாசப்படுங்கள். அப்போது உங்கள் இருதயத்தில் கோபத்தைத் தூண்டும் சாத்தான் தோல்வியடைவான். சமாதானத்தின் நாள்!**

ஜெபம்

பரிசுத்தமுள்ள பிதாவே! நீங்கள் அன்பான தேவனாயிருக்கிறீர்கள் என்றும், கோபம் சாத்தானால் உருவாகிறது எனவும் அறிந்தேன். என் இருதயத்தின் கோபத்தை அகற்றி உங்களை பிரியப்படுத்தும்படியாய் ஜீவிக்க எனக்கு தயை புரியுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அன்றியும், உன் சத்துருப்பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங்கொடு, அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய்." (ரோமர் 12:20)

ஜீவ மன்னா
செப்டெம்பர்
21 புதன்

எம் பாவங்களையும்
மீறுதல்களையும் மன்னிக்கும்
பரிசுத்த தேவன்!

வேதவாசிப்பு
யாத்திராகமம்
அதி: 32-33

**"நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்."** (சங்கீதம் 32:5)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **எல்லா வல்லமைகளையும் மேற்கொள்கிற சர்வ வல்லமையுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்று உங்களுக்கு நந்நாளாக திகழ ஆசீர்வதிக்கிறேன்.** எம் பாவங்களையும், மீறுதல்களையும் மன்னிக்கிற தேவனானவர் இன்றும் எம்மோடிருக்கிறார். எம் தேவனாகிய கர்த்தர் அவரது ஒரே குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினால் **எம் பாவ சாபங்களை முற்றிலுமாய் நீக்கி விடுதலையளித்தார்.**

தேவ பிள்ளைகளே! **1யோவான் 2:2**இல் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது. **நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல சர்வலோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார்** என்று. உலகில் யார் யார் நமக்காய் நம் பாவங்களின் நிமித்தம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து **தம்மையே சிலுவையிலே கிருபாதார பலியாக ஒப்புக் கொடுத்து பாவத்திலிருந்து விடுதலையளித்தார் என விசுவாசித்து முழு உள்ளத்தோடு ஏற்றுக் கொள்கிறார்களோ அவர்கள் பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்றுக் கொள்கிறார்கள்.** அவர்களின் மீறுதல்களும் மன்னிக்கப்படும். ஆனால் பாவ மன்னிப்பைப் பெற்று தேவ பிள்ளையாக இருப்பவர்கள் மறுபடியும் தவறுகள் செய்தால் அதை மறைக்காது தேவ சமூகத்தில் அறிக்கையிட்டு மனந்திரும்புவது அவசியமாகும். **சங்கீதம் 32:5**இல் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. **"நான் என் அக்கிரமத்தை மறைக்காமல் என் பாவத்தை உமக்கு அறிவித்தேன் என் மீறுதல்களை கர்த்தருக்கு அறிக்கையிடுகிறேன்"** என்று.

அன்பான தேவ பிள்ளைகளே! **நாம் அறிந்தோ, அறியாமலோ செய்கிற பாவங்கள், மீறுதல்கள் தவறுகளை தேவ சந்நிதியில் அமர்ந்து அறிக்கையிட்டு மனஸ்தாபப்பட்டு மன்னிப்பை கேட்போமாகில் ஆண்டவர் பாவம், மீறுதல் தவறுகளை மன்னித்தருளுவார். மாம்சமான சரீரம்** பலவீனமானதென்றும் **ஆத்துமா பரிசுத்தமாக தேவனுக்கு பிரியமாய் வாழ வாஞ்சிக்கிறது என அவர் அறிவார்.** ஆகையால் எம்மால் செய்யப்பட்ட பாவங்களை, பிழைகளை மறைக்காது அறிக்கையிடுவோமாகில் ஆண்டவர் யாவையும் மன்னிப்பார். தேவன் தம் சொந்த பிள்ளைகளை ஒரு போதும் கைவிடவோ, புறம்பே தள்ளவோ மாட்டார். அவர் எம்மை நேசிக்கிறார். **தேவ அநுக்கிரகத்தின் நாள்!**

ஜெபம்

பரிசுத்தமுள்ள பிதாவே! என் பாவங்களை மறைத்து உங்களுக்கு உங்களுக்கு மறைந்து வாழ முடியாதென நான் அறிந்தேன். இன்று முதல் என்னால் செய்யப்படுகிற பாவங்கள், மீறுதல்களை உங்கள் முன் அறிக்கையிட்டு மன்னிப்பை பெற்று விட்டு விட எனக்கு தயை புரியுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்." (நீதிமொழிகள் 28:13)

ஜீவ மன்னா
செப்டெம்பர்
22 வியாழன்

தேவ கோபம்
பற்றி எரியுமானால்
உங்கள் வாழ்வு
கசப்பாய் மாறும்!

வேதவாசிப்பு
யாத்திராகமம்
அதி: 34-35

**"நீர் என்னை உயரத் தூக்கி, தாழத்தள்ளினீர், உமது சினத்திற்கும் கடுங்கோபத்திற்கும் உள்ளானேன்."** (சங்கீதம் 102:9)

தேவனுக்குள் பிரியமான தேவ பிள்ளைகளே! புதிதாக்கும் ஆண்டவராகிய **இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இன்றைய நாளிலே ஆவி, ஆத்துமா, சரீரத்தை முற்றிலும் புதிதாக்கி ஆசீர்வதிக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்! "நெரிந்த நாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும்" நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார்.** எனும் **ஏசாயா 42:3**ம் வசனத்தின்படி எம்மில் அளவு கடந்த அன்புக் கூர்ந்து எம் ஆத்துமாவை காக்கும்படியாக மிகவும் மாபெரும் ஜீவனுள்ள தேவனாகிய ஆண்டவர் இன்றும் எம்மோடிருப்பதால் **உங்கள் உள்ளம் கலங்காதிருப்பதாக!**

அன்பான தேவ பிள்ளைகளே! இன்றைய நாளிலும் **ஜீவ மன்னா நாளிதலை கையில் எடுத்த நேரம் திகைத்து விட்டீர்களா? ஏனென்றால் இன்றைய தேவ வசனத்தில் எழுதியிருப்பது தேவன் எம்மீது கோபம் கொள்ளும் போது நாம் எந்நிலையில் இருப்போம் என்பதையே. சங்கீதம் 102:9இல் துயரப்படுகிறவன் துக்கத்தின் மூழ்கி தன் வியாகுலத்தை தெரிவித்துச் செய்யும் விண்ணப்பமாகும்.** தேவனுடைய சந்நிதானத்தில் ஏறெடுக்கப்பட்ட ஜெபம் **எம் தேவனானவர் கிருபையுள்ளவரும், பொறுமையுள்ளவரும், இரக்கமுள்ளவரும் நீதி நிறைந்தவருமானவர்.** அவர் உரைக்கிறார் **"நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும் கர்த்தர் அவைகளெல்லாவற்றிலுமிருந்து அவனை விடுவிப்பார்"** என்பதாக. ஆனால் **(சங்கீதம் 34:19) அவர் ஏன் சினங் கொண்டு எம் மீது கோபப்பட்டு தண்டிக்கிறார் என்கிறீர்களா?**

தேவ பிள்ளைகளே! **நீதிமொழிகள் 23:13,14**இல் கூறுகிறது **"பிள்ளையை தண்டியாமல் விடாதே அவனைப் பிரம்பினால் அடித்தால் அவன் சாகான் நீ பிரம்பினால் அவனை அடிக்கிறதினால் பாதாளத்திற்கு அவன் ஆத்துமாவைத் தப்புவிப்பாயே"** என்று. இவ் உபதேசத்திற்கூடாய் தேவன் பெற்றோர்களோடு பேசுகிறார். **எப்படியெனில் தம் பிள்ளை தவறு செய்யும் போது அத்தப்பினால் அவர்கள் அழிந்து போகாதபடி அவனை நல்வழியில் நடத்தும்படி பெற்றோர் பிள்ளைகளை தண்டிக்க வேண்டும்** என்று. எம் ஆத்துமா நித்திய ஜீவனடையும்படியாக எம்மை அழைத்து தமது சொந்த பிள்ளைகளாக மாற்றிய பிதாவானவர் நாம் தவறு செய்யும் போது எமக்கு தண்டனை வரச் செய்வது எம்மை நல் வழியில் நடத்தும்படியாக அல்லவா? **தேவ கோபத்தினால் வரும் ஆக்கினை எமக்கு விரக்தியையும், கசப்பையும் ஏற்படுத்தலாம்.** அப்போது புலம்பவது மாத்திரமே எமது உரிமையாகும் நீங்கள் உங்கள் தவறுகளை கைவிட்டு மறுபடியும் **தேவனிடம் திரும்புங்கள் நீங்கள் இருந்த நிலமையைப் பார்க்கிலும் வாழ்விலே மேன்மையைக் காண்பீர்கள். வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

அன்பின் தேவனே! என் தகப்பன், தாயைப் பார்க்கிலும் என் மீது அன்பு கொண்டவரே என் தவறுகளை திருத்தி நல்வழிப்படுத்தும்படியாக என்னை கண்டிக்கிறவரே உங்களுக்கு கீழ்படிய எனக்கு உங்கள் கிருபையை அருளுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"காயத்தின் தழும்புகளும், உள்ளத்தில் உறைக்கும் அடிகளும், பொல்லாதவனை அழுக்கறத் துடைக்கும்." (நீதிமொழிகள் 20:30)

ஜீவ மன்னா
செப்டெம்பர்
23 வெள்ளி

## இஸ்ரவேலின் தேவன் உங்களோடிருப்பதால் பயப்படாதீர்கள்!

வேதவாசிப்பு
யாத்திராகமம் அதி: 36-37

**"ஆலோசனை செய்யுங்கள், அது அபத்தமாகும்; வார்த்தையை வசனியுங்கள், அது நிற்காது; தேவன் எங்களோடே இருக்கிறார்."** (ஏசாயா 8:10)

அன்புக்குரிய தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ள தேவன் தாமே உங்களை இப்புதிய நாளிலே வழுவாதபடி காத்துக் கொள்வாராக!** என **வாழ்த்துகின்றேன். உங்களுக்கு விரோதமாக பத்தாயிரம் பேர் வந்தாலும் உங்களை ஒருவனும் நெருங்க முடியாதபடி உங்கள் தேவன் காத்துக் கொள்வார்.** ஏனெனில் சங்கீதம் 91:7இல் **"உன் பக்கத்தில் ஆயிரம் பேரும் உன் வலது புறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும் அது உன்னை அணுகாது"** என தேவன் வாக்களித்துள்ளார்.

தேவ பிள்ளைகளே! **நாம் வாழும் சமுதாயத்திலே எம்மை எதிர்ப்போரும், விரோதமாய் இருப்பவர்களும் அதிகமாய் காணப்படலாம்.** எம் ஆத்மீக வாழ்வினைக் குறித்து எரிச்சலடைகிறவர்களும் இருப்பார்கள். ஆயினும் **ஏசாயா 8:10**இல் கூறுகிறார் **"ஆலோசனை செய்யுங்கள், அது அபத்தமாகும் வார்த்தையை வசனியுங்கள் அது நிற்காது. தேவன் எங்களோடிக்கிறார்"** என்பதாக. இவ் வார்த்தைகளை இஸ்ரவேலருக்கு கர்த்தர் ஏசாயா தீர்க்கதரிசியைக் கொண்டு வெளிப்படுத்தியதாகும். ஆகையால் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! ஏசாயா 2:22**இல் **"நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை விட்டு விடுங்கள்"** என கூறப்பட்டுள்ளது. ஆத்மீகர்களினாலும், ஆத்மீக அல்லாதவர்களினாலும் பிரச்சினை, துன்பம், எதிர்ப்பார்ப்புகள் போன்றவைகள் ஏற்படலாம்.

தேவனுடைய பிள்ளைகளே! **உலகத்தோரால் இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம். ஆனால் ஆத்மீகர்களாலும் இப்படி உபாயங்கள், துர் ஆலோசனைகளும் ஏற்படுமா?** என்று எண்ணக் கூடும். **சாத்தான் மிக தந்திரக்காரனானபடியால் பலவீனமான ஆத்மீகர்களுடைய இருதயத்தில் பொறாமையை ஏற்படுத்தி எமக்கு விரோதமாக அவர்களை தூண்டுகிறான்.** விஷேசமாக எம் விசுவாசத்தை சீர்குலைத்து எமக்கு அதைரியத்தை உண்டு பண்ணி எம் ஆத்மீக வாழ்வினை வீழ்த்தப் பார்ப்பான். இப்படியான சந்தர்ப்பங்களில் **ஏசாயா 8:10இல் தேவ வசனத்தை வாசித்து பெலனடையுங்கள். இஸ்ரவேலரோடு இருந்த கர்த்தர் இன்றும் ஜீவனுள்ளவராய் உங்களோடிருக்கிறார். ஆகையால் யாராலும் உங்களை தோல்வியடையச் செய்யவோ, விழத்தள்ளவோ முடியாது. விடுதலையின் நாள்!**

ஜெபம்

இஸ்ரவேலின் தேவனே! இன்றும் ஜீவிக்கிறவராகவே இருக்கிறீர் என்றும் என்னோடு இருக்கிறவராய் இருக்கிறீர்கள் என்றும் விசுவாசிக்கிறேன். என் விரோதிகளிடமிருந்து இன்றும் என்னை விடுவித்து காத்தருளுமாறு இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

தேவ வாக்குத்தத்தம்

"கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள்; கர்த்தராகிய யேகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார்." (ஏசாயா 26:4)

ஜீவ மன்னா

செப்டெம்பர்

24 சனி

## தேவனுடைய வார்த்தைகளின் பிரகாரம் செயல்படுங்கள்!

வேதவாசிப்பு

யாத்திராகமம் அதி: 38-39

**“தங்கள் பிள்ளைகளைப் பாகாலுக்குத் தகனபலிகளாகத் தகனிக்கும்படி பாகாலின் மேடைகளைக் கட்டினபடியினாலும் இப்படி வரப்பண்ணுவேன்; இவைகளை நான் கற்பித்ததுமில்லை, சொன்னதுமில்லை, இவைகள் என் இருதயத்தில் தோன்றினதுமில்லை.”** (எரேமியா 19:5)

பிரியமான தேவ பிள்ளைகளே! ***ஜீவனுள்ள தேவன் இன்றைய நாளிலும் உங்களைத் தம் வல்லமையான கரங்களுக்குள்ளாக மறைத்துப் பாதுகாத்துக் கொள்வாராக என ஆசீர்வதிக்கிறேன்.*** எம் தேவனாகிய ஆண்டவர் அவரது பிள்ளைகளாகிய ***நாம் ஒவ்வொருவரும் அவரது வார்த்தைகளை கைக் கொள்ள வேண்டுமென விரும்புகிறார். “கர்த்தர் யோசுவாவை நோக்கி நான் உனக்கு கட்டளையிடவில்லையா? பலங்கொண்டு திடமனதாயிரு, திகையாதே! கலங்காதே! நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்”*** என்று கூறினார்.

தேவ பிள்ளைகளே! இவ் வார்த்தைகளின்படி, ***அவரது வார்த்தைகளுக்கு செவி கொடுத்து அதை நிறைவேற்றும்படியாக கீழ்படிந்து நடக்க வேண்டும் என்பது அவரது விருப்பம் என்று தெளிவாகிறதல்லவா?*** யோசுவாவின் தேவனானவர் இன்றும் என்னோடும், உங்களோடும் இருக்கிறார். ***எரேமியா 19:5***இல் கூறுகிறது ***அவர் கற்பிக்காத, சொல்லாத, நினையாத காரியங்களை இஸ்ரவேலர்கள் செய்தார்கள் என்று. இஸ்ரவேல் ஜனங்களின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து பாலும் தேனும் ஓடும் செழிப்பான தேசத்தைக் கொடுத்த தேவனை விட்டு விட்டு அவர் கண் எதிரிலேயே கூடாத துஷ்டத்தனமானவற்றை செய்தபடியால் எரேமியா தீர்க்கத்தரிசியின் மூலம் இப்படி பேசினார்.***

தேவ பிள்ளைகளே! இது ஆண்டவர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு கொடுத்த ஒரு பரீட்சையென எண்ணுகிறேன். ***அன்று இஸ்ரவேலரின் ஒரு சிலர் ஜனங்களை ஏமாற்றி தேவ வார்த்தைகளுக்கு மாறுபாடான செய்கைகளை செய்ய தூண்டினார்கள்.*** இன்று இப்படியான செயல் நடைபெறுகிறது. ஆகையால் இவ் வார்த்தைகளை வாசிக்கும் நீங்கள் அவருடைய வார்த்தைகளுக்கு மாத்திரம் செவி கொடுத்து அதன்படி நடக்க மனதாயிருங்கள். ***நீங்கள் அறிந்தோ, அறியாமலே செய்யும் எல்லா செயல்களுக்கும் பலன் உண்டு.*** ஆகையால் எப்போதும் விழிப்பாயிருந்து தேவனுடைய வார்த்தைகளின்படி செயலாற்றி ஆசீர்வாதத்திற்குரியவர்களாக முன்னோக்கிச் செல்லுங்கள். ***ஜெயம் தரும் நாள்!***

ஜெபம்

மகா பரிசுத்தமுள்ள பரலோக தேவனே! உங்கள் வார்த்தைகளுக்கூடாய் என் ஆத்துமாவை நலவழிப்படுத்துவரே! உங்கள் வார்த்தைகளின்படி வாழ அருள் புரியுமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.

~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; இந்தப் புஸ்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கைக்கொள்ளுகிறவன் பாக்கியவான் என்றார்.” (வெளிப்படுத்தல் 22:7)

ஜீவ மன்னா
செப்டெம்பர்
25 ஞாயிறு

எம்மை மறுபடியும் புது சிருஷ்டியாய் ஜனனமடையச் செய்யும் இயேசுகிறிஸ்து!

வேதவாசிப்பு
யாத்திராகமம் 40
லேவியராகமம் 01

**"இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறாவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்."** (பரி.யோவான் 3:5)

அருமையான தேவ பிள்ளைகளே! உயிரோடெழுந்த **இயேசுகிறஸ்துவின் வல்லமையான நாமத்தினால் ஆவியினாலே மறுபடியும் பிறந்த தேவ பிள்ளைகளாகிய நீங்கள் ஆத்மீக வழிப் பயணத்திலே ஜெயம் பெற்று நடந்து ஜீவ கிரீடத்தை சுதந்தரித்துக் கொள்ளுமாறு வாழ்த்துகின்றேன்.** ஒரு மனிதனை ஆத்துமாவிலே புது சிருஷ்டியாய் மறுபடியும் பிறக்கச் செய்ய இப் பூலோக மனிதர்களால் முடியாது. **எம் மீட்பர் இயேசுகிறிஸ்து இச் சலாக்கியத்தை எமக்கருளியுள்ளார்.**

தேவ பிள்ளைகளே! உலகில் பிறந்த சகல மனிதர்களுக்குள்ளும் பாவம் உள்ளது. **இந்த பாவமானது பரம்பரையாகத் தொடர்ந்துக் கொண்டிருக்கிறது. இதன் நிமித்தம் ஆத்துமா மரணத்திருக்கிறது. ஆனால் சரீரம் உயிர் உள்ளதாய் இருக்கிறது.** ஆத்துமா பாவத்திலிருந்து மீட்படைய மரணம் என்னும் தண்டனையை பெற வேண்டும். இரட்சகராகிய இயேசுகிறிஸ்து எம் பாவங்களுக்காய் சிலுவையில் ஆணிகளால் அறையப்பட்டு, இரத்தம் சிந்தினவராய் தம் ஜீவனை எமக்காய் அர்ப்பணித்தார் என்பதை ஏற்றுக் கொண்டு எம் பாவ சரீரம் அவரோடே கூட **சிலுவையில் அறையப்பட்டு மரணமடைய இடங் கொடுப்போமேயானால் பாவங்கள் நீங்கப் பெற்று புது ஜீவனை பெறலாம். மரித்தவன் பாவத்திற்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறானே"** என சத்திய வசனத்தில் **ரோமர் 6:7**இல் வெளிப்படுத்தப்படுகிறது. அதன்படி புது வாழ்வு பெறும்படியாக முழுக்கு ஞானஸ்நானத்தின் மூலம் நீரில் அவரோடே மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மறுபடியும் மறுப்பிறப்படைந்தவர்களாய் இருக்கிறோம்.

தேவ பிள்ளைகளே! **இது ஜலத்தினால் பிறப்பதாகும். இன்னும் ஆவியில் பிறப்பதென்பது சத்திய வசனங்களை முழு உள்ளத்தோடு விசுவாசித்து ஏற்றுக் கொள்வதன் மூலம் உள்ளாந்திர மனிதனான ஆத்துமா புதுப் பிறப்படைய செய்வதாகும். "ஒரு மனிதன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறப்பேனாயாகில் அது மிக பெறுமதிமிக்க விடயமாகும்."..."ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின"** என்று **2 கொரிந்தியர் 5:17**இல் உரைக்கப்பட்டுள்ளது. **நீங்கள் மறுபடியும் பிறந்து புதுச் சிருஷ்டியாயிருப்பீர்களாயின் அந்நிகரற்ற சலாக்கியத்தை பாதுகாத்து பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்க கூடிய உரிமையை பெற்று ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக திகழுங்கள். ஜெயத்தின் நாள்!**

ஜெபம்

என் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவே! என்னை மறுபடியும் புது சிருஷ்டியாய் பிறக்கச் செய்தவரே பரலோக இராஜ்யத்திற்குரிய மகிமையின் கிரீடத்தை பெறும்படியாக என்னை அவதரித்தவரே உங்களுக்கு ஸ்தோத்திரம்! அந்த இரட்சிப்பை காத்துக் கொண்டு பரலோக இராஜ்யத்திற்கு செல்ல கிருபையளிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்." (ரோமர் 6:23)

ஜீவ மன்னா
செப்டெம்பர்
26 திங்கள்

மகா இரக்கம் நிறைந்த தேவன்!

வேதவாசிப்பு
லேவியராகமம்
அதி: 02-03

**“உன் தேவனாகிய கர்த்தர் இரக்கமுள்ள தேவனாயிருக்கிறபடியால், அவர் உன்னைக் கைவிடவுமாட்டார், உன்னை அழிக்கவுமாட்டார், உன் பிதாக்களுக்குத் தாம் ஆணையிட்டுக் கொடுத்த உடன்படிக்கையை மறக்கவுமாட்டார்.”**
(உபாகமம் 4:31)

அன்பான தேவ பிள்ளைகளே! **வானத்தையும், பூமியையும் படைத்த ஜீவனுள்ள தேவன் இன்றைய நாளிலும் உங்களை ஆசீர்வதித்து வர்த்திக்கப்பண்ண வேண்டுமென வாழ்த்துகின்றேன்.** எம்மை சிருஷ்டித்த தேவனாகிய **கர்த்தர் எம்மை அதிகமாய் நேசிக்கிறபடியால் எமது பலவீனங்கள், குற்றம், குறைகள், பிழைகள், பாவங்களை மன்னித்து அழிவிலிருந்து எம்மை பாதுகாக்கின்றார்.**

தேவ பிள்ளைகளே! இன்றைய எம் தேவ செய்தியின் முதல் தேவ வசனம் **“எம் ஆண்டவர் இரக்கமுள்ள தேவனாயிருக்கிறபடியால் அவர் உன்னை கைவிடவுமாட்டார், அழிக்கவுமாட்டார்”** என்றுரைக்கிறது. அதே போல் உன் பிதாக்களுக்கு தாம் ஆணையிட்டுக் கொடுத்த உடன்படிக்கையை மறக்கவுமாட்டார் என்று சொல்கிறது. **எம் தேவன் தாமே பரலோகத்தில் வாசம் பண்ணுகிறவரும், மகா உன்னதமானவரும், மகா பரிசுத்த ஆவியானவரும், நீதிபரரும் உயர்ந்தவருமான கர்த்தாதி கர்த்தராவார்.** நாமனைவரும் அவர் உருவாக்கிய பூமியில் வாழும் மிகச் சிறிய மனிதர்களாவோம். ஆகையால் நாம் அவர் பார்வைக்கு முன் எவ்வளவு நல்லவர்களாய், நீதிமான்களாய், பரிசுத்தர்களாய் வாழ வேண்டும் என்பதை சிந்திக்க கடமைப்பட்டுள்ளோம்.

தேவ பிள்ளைகளே! அவரது குறைவில்லா, அளவுகளைக் கடந்த சதாகாலங்களிலும் நிலவுகிற அன்பினால் எம் தகுதிகளைப் பாராது **எம்மீது கிருபை கூருகிறபடியால் அவரது சந்நிதானத்தில் நிற்கவும் அவரை பரலோகத் தகப்பனே என்றழைக்கவும் பாத்திரவான்களாயிருக்கிறோம்.** இதை நீங்கள் அசட்டையாய் எண்ணாதிருங்கள். **உங்கள் வாழ்விலே சந்திக்க நேர்ந்த பிரச்சினைகள், துன்பங்கள், சவால்களின் போது அவரது குரலுக்கு செவிமடுக்காதபடியால் வாழ்க்கை சிதைந்து சிறுமைப்பட்டு போனதா?** தோல்வியடைந்தீர்களா? ஆயினும் ஆண்டவர் உங்களையும் உங்கள் ஆத்துமாவின் பெலவீனங்களையும் நன்கறிந்தவராய் இருப்பதால் உங்களை அழிவிற்கு தப்புவித்து ஒத்தாசைகளைப் புரிந்து மறுபடியும் கட்டியெழுப்ப வல்லவராய் இருக்கிறார். **நீங்கள் ஊக்கமாய் ஜெபித்து அவரது மாறாத தயவை பெற்றுக் கொள்ளுங்கள். மனமகிழ்ச்சியின் நாள்!**

ஜெபம்

பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே! நீங்கள் இரக்கத்தின் தேவனாயிருப்பதால் எங்கள் பெலவீன நேரங்களில் உங்கள் கிருபையை பெற்று என்னை தேற்றுகிறபடியால் நன்றி! இன்றும் உங்கள் மகா இரக்கத்தை பெற்றுக் கொள்ள இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

“நான் அவர்கள் சீர்கேட்டைக் குணமாக்குவேன்; அவர்களை மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பேன்; என் கோபம் அவர்களைவிட்டு நீங்கிற்று.” (ஓசியா 14:4)

ஜீவ மன்னா
செப்டெம்பர்
27 செவ்வாய்

அவருடைய நாமத்தின் நிமித்தம் எமக்கு கனத்தை ஏற்படுத்தும் தேவன்!

வேதவாசிப்பு
லேவியராகமம்
அதி: 04-05

"உன் தேவனாகிய கர்த்தர் பட்சிக்கிற அக்கினி, அவர் எரிச்சலுள்ள தேவன்."
(உபாகமம் 4:24)

அன்பான தேவ பிள்ளைகளே! **ஜீவனுள்ள இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் இப் புதிய காலைப் பொழுதினில் வசனத்தினாலும், வல்லமையினாலும், விசுவாசத்தை வர்த்திக்கிப்பண்ணி ஜெயம் பெற வாழ்த்துகின்றேன்.** வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்து அதிலுள்ள யாவையும் ஆளுகை செய்யும் தேவன் **அவரது சொந்த பிள்ளைகளாக இப்பூமியில் மற்ற ஜனங்களிலிருந்து எம்மை வேறுபிரித்தெடுத்தபடியால் நீங்கள் பாக்கியவான்கள்**! ஏனெனில் அவர் மகிமை நிறைந்த தேவனாக விளங்குவதால், அவரது பிள்ளைகளான எங்களை இப் பூமியில் வாழும் மற்ற ஜனங்களைப் பார்க்கிலும் மேன்மையாக மாற்றுவது அவரது பிரியமாகும்.

தேவ பிள்ளைகளே! மேலே தரப்பட்ட பிரதான தேவ வசனத்தில் **"உன் தேவனாகிய கர்த்தர் பட்சிக்கிற அக்கினி அவர் எரிச்சலுள்ள தேவன்"** என்று. அவர் தம் நாமத்தைக் குறித்து இவ்வளவாய் எண்ணுவாராகில் தம் சாயலாக படைத்த மனிதனைக் குறித்து எவ்வளவு கரிசனைக் கொண்டிருப்பார். அதிலும் மேலாய் **"கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியால் நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக, நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்தேன்"** என்று **லேவியராகமம் 20:26**இல் கூறியிருக்கிறார். தேவனுடைய ஒரே குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் எம்மை அவரது பிள்ளைகளாகும்படி தெரிந்துக் கொண்டாரெனில் தேவ பிள்ளகைளாக அழைப்பை பெற்று நாம் உன்னத வரப்பிரசாதத்தை பெற்ற **நாம் அதிர்ஷ்டக்காரர்கள்** அல்லவா?

அன்பான தேவ பிள்ளைகளே! **இயேசுகிறிஸ்து கூறுகிறார் இப்பொழுது மனுஷகுமாரன் மகிமைப்படுகிறார். தேவனும் அவரில் மகிமைப்படுகிறார். "தேவன் அவரில் மகிமைப்பட்டிருந்தால் தேவன் அவரை தம்மில் மகிமைப்படுத்துவார். சீக்கிரமாய் அவரை மகிமைப்படுத்துவார்"** என்பதாக **பரி.யோவான் 13:31,32** கூறப்பட்டுள்ளது. **அவருடைய நாமத்தை நாம் தரித்துக் கொண்டிருப்பதால் அவர் ஒரு போதும் எம்மை வெட்கப்படவோ, அகௌரவப்படவோ இடங் கொடுக்கமாட்டார். அவருடைய சொந்த நாமம் இயேசு எனும் நாமம் என்றபடியால் எம்மை விடுவித்து, இரட்சித்து எம்மைக் கௌரவப்படுத்துவார். நீங்கள் திடன் கொள்ளுங்கள்! வெற்றிச் சிறந்த நாள்!**

ஜெபம்

இம்மானுவேலனாகிய நல்ல இயேசுவே! உம்முடைய நாமத்தின் நிமித்தம் எம்மை கௌரவப்படுத்துபவரே ஸ்தோத்திரம்! உம்முடைய நாமத்தை தரித்தவர்களாகிய எம்மை எந்த இடத்திலும் எந்த நிலையிலும் வெட்கப்படுத்தாதபடி எம்மை கௌரவப்படுத்தி உயர்த்தும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"என்னிமித்தம், என்னிமித்தமே, அப்படிச் செய்வேன்; என் நாமத்தின் பரிசுத்தம் எப்படிக் குலைக்கப்படலாம்? என் மகிமையை நான் வேறொருவருக்குங்கொடேன்." (ஏசாயா 48:11)

ஜீவ மன்னா

செப்டெம்பர்

28 புதன்

உங்களை மேன்மைப்படுத்தும் கர்த்தர்!

வேதவாசிப்பு

லேவியராகமம் அதி: 06-07

**"என் தாசனாகிய மோசே மரித்துப் போனான்; இப்பொழுது நீயும் இந்த ஜனங்கள் எல்லாரும் எழுந்து, இந்த யோர்தானைக் கடந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு நான் கொடுக்கும் தேசத்துக்குப் போங்கள்."** (யோசுவா 1:2)

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! **ஜீவனுள்ள தேவனின் நாமத்தின் வல்லமையினால் இப் புதிய நாளிலே உங்கள் உள்ளம் தேவ ஆறுதலினால் நிரப்பும்படி பிரார்த்திக்கின்றேன்.** உடைந்து போன உள்ளத்தை வேதனையிலும், கண்ணீரிலும் சஞ்சலத்தோடும் இந்நாளை ஆரம்பிக்கிறீர்களா? **இன்று துன்பத்திலும், துயரத்திலும் வாடும் உங்களை தேவன் ஆறுதல்படுத்துகிறார்.**

அன்பு தேவ பிள்ளைகளே! உடைந்த உள்ளத்தோடு காணப்படுகிறீர்களா? உங்களுக்கு ஏறபட்ட பிரச்சினை, துன்பம், இதற்கு காரணமா? அல்லது **உங்கள் பலவீனத்திலோ, குறைபாடுகளினாலே குற்றம் சுமத்தப்பட்டவராய் மனம் நொந்து போயிருக்கிறீர்களா?** இல்லாதததை இருக்கிறதைப் போல் காட்டும் சூழ்நிலைகளில் கலங்கிக் கொண்டிருக்கிறீர்களா? ஆயினும் **உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக!** உங்களை யார் தள்ளி வைத்தாலும், யார் உங்களை வெறுத்தாலும் உங்களைப் படைத்தவர் உங்களோடிருப்பதால் உங்களைத் தள்ளவோ, வெறுக்கவோ மாட்டார். **உண்மையாகவே எம்மை வேதனைப்படுத்தும் பிரச்சினைகள், துன்பங்கள், உபத்திரவங்கள் சூழ்ந்த வேளைகளில் யாராவது ஒருவர் எமக்கு உதவி செய்ய வருவார்களாயின் அது எமக்கு மகிழ்ச்சியை நம்பிக்கையைத் தரும்.** ஆனாலும் சில மனிதர்கள் எங்களுக்கு உதவி செய்ய முன் வருவதைப் பார்க்கிலும் ஓடி மறைந்துக் கொள்வார்கள்.

பிரியமான தேவ ஜனமே! **யோசுவா 1:2**இல் "தேவனாகிய கர்த்தர் மோசேயின் உதவியாளராக யோசுவாவை ஏற்படுத்தி. இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தில் அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப்படுத்தி, வழி நடத்தி வந்த மோசே மரித்த பிறகு இதுவரை **"யோசுவாவை இஸ்ரவேல் ஜனங்களின் தலைவனாக நியமித்தார்." யோசுவாவை மேன்மைப்படுத்தின ஆண்டவர் இன்றும் உயிரோடிருக்கிறார்.** உங்கள் வாழ்க்கையின் நிலமைகள் எவ்வகையிலாவது பாதிப்பு ஏற்பட்டு நிலை குலைந்து போய் இருந்தால், உலகத்தோர் உங்களை இன்னுமாய் கீழே தள்ளி மிதிக்க முற்படலாம். ஆயினும் **உங்களை உயர்த்த வல்ல தேவன் உங்களோடிருக்கிறார். அவருக்கு பிரியமானபடி நல்ல வாழ்க்கையை வாழ முற்படுங்கள்.** உங்கள் நற்கிரியைகளைக் காணும் தேவன் உங்கள் கிரியைகளுக்கு ஏற்ற பலனைத் தரும் தேவனாயிருப்பதால் உங்களுக்கு நன்மைகளை அருளி ஆசீர்வதிப்பார். **ஆசீர்வாதமான நாள்!**

ஜெபம்

எங்கள் பரிசுத்தமுள்ள தேவனே! மோசேயின், யோசுவாவின் தேவனுமானவரே நன்றி! யோசுவாவின் நற்கிரியைகளை கவனித்து மேன்மையாக உயர்த்தி வைத்தவரே உம்மை ஸ்தோத்தரிக்கும் அதே போல் நானும் நற்கிரியைகளை செய்ய என்னை வழி நடத்தி உயர்த்தி ஆசீர்வதிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"அப்பொழுது கர்த்தருடைய நாமம் உனக்குத் தரிக்கப்பட்டது என்று பூமியின் ஜனங்களெல்லாம் கண்டு, உனக்குப் பயப்படுவார்கள்."
(உபாகமம் 28:10)

ஜீவ மன்னா
செப்டெம்பர்
29 வியாழன்

அவரது காயங்களால்
இன்றும் எம்மை
சுகமாக்குகிறார்!

வேதவாசிப்பு
லேவியராகமம்
அதி: 08-09

"அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது பலவித வியாதிகளையும் வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும் சந்திரரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; அவர்களைச் சொஸ்தமாக்கினார்."
(பரி.மத்தேயு 4:24)

அன்பார்ந்த தேவ பிள்ளைகளே! **எம் பரிகாரியாகிய ஜீவனுள்ள தேவனின் வல்லமையுள்ள நாமத்தினால் இந்நாளிலே சுக ஜீவிகளாய் வாழ வாழ்த்துகின்றேன்.** இப்பூமியில் வாழ்பவர்கள் யாவரும் விரும்புவது நோயற்ற வாழ்வையும், சந்தோஷத்தையுமாகும். உலக நாடுகளின் ஆளுநர்கள் யாவரும் தேச மக்களுக்கு சுக வாழ்வை பெற்றுக் கொடுக்கும்படியாக அநேக மருத்துவ மனைகளை நிறுவி, நவீன வைத்தியக் கருவிகள், வைத்திய முறைகளை செயல்படுத்தி மனிதர்களுக்கு **சுக வாழ்வை பெற்றுக் கொடுக்கும்படி அநேக முயற்சிகளை மேற் கொள்கிறார்கள். மனிதர்கள் சுக ஜீவிகளாக வாழ்வது அவசியம் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.**

பிரியமான தேவ பிள்ளைகளே! நவீன யுகத்திலே பயங்கரமான நோய்களைக் குறித்து கேள்விப்படுகிறவர்களாய் இருக்கிறோம். **இரத்தப் புற்று சரீரத்தின் தசைகள் கரைவது, மூளைக்கட்டிகள், பிறவியிலே நோய்கள், நரம்பு சம்பந்தமான நோய்கள். சுவாசத் தொகுதி நோய்கள் போன்றவைகள் அவற்றில் சில நிகழ் காலத்திலே புற்று நோய் ஏற்படுவதை அதிக அளவிலே காணக் கூடியதாயிருக்கிறது.** சரீரத்திலே வேதனை, வீக்கம் எந்த அவயத்தில் காணப்பட்டாலும் பயந்து போய் வைத்தியரை தேடி ஓடுகிறார்கள். **ஆயினும் புற்று நோய் சம்பந்தமாக அளிக்கப்படும் வைத்திய பரிகாரங்களினால் மனிதர்களுக்கு எவ்வளவு தூரம் சுகத்தையளிக்கிறது என்பதை நாம் அறியோம்.**

தேவ பிள்ளைகளே! உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக! **பரி.மத்தேயு 4:24**இல் கூறப்பட்டிருக்கிறது. **"சகல பிணியாளிகளையும், பிசாசு பிடித்தவர்களையும், சந்திரரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். அவர்களை சொஸ்தமாக்கினார்"** என்பதாக. இன்றும் இரட்சகர் இயேசு ஜீவிக்கின்றவராக காணப்படுகிறார் அல்லவா? ஆண்டவர் இப் பூமியில் வாழ்ந்த காலங்களில் மனிதர்களை குணமாக்கியது போலவே **இக்காலங்களிலும் சிலுவையிலே பெற்ற கசையடிகள் மூலமாக கை கால்களில் அடிக்கப்பட்ட ஆணிகளால் ஏற்பட்ட காயங்களினாலும் எம்மை சுகமாக்குவேன் என்று வாக்களித்தவர் அதை நிறைவேற்றுகிறார். நீங்களும் அவரை விசுவாசித்தால் அவரது கசையடிகளினாலும், கை கால்களின் காயங்களினாலும் பூரண சுகத்தை பெற்றுக் கொள்ளலாம். ஆரோக்கியமுள்ள ஆசீர்வாதத்தின் நாள்!**

ஜெபம்

உன்னதமான பரிசுத்தமுள்ள தேவனே! எங்கள் பாவங்கள் நிமித்தம் சிலுவையிலே கசையடிகளினாலும், ஆணிகளாலும் அறையப்பட்டு எங்களுக்காக இரத்தம் சிந்தினவரே நன்றி! எம் பாவங்கள் யாவையும் மன்னித்து எம்மை குணமாக்கும்படி இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ~ஆமென்~

இன்றைய வாக்குத்தத்தம்

"அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி," (சங்கீதம் 103:3)

ஜீவ மன்னா
செப்டெம்பர்
30 வெள்ளி

# உங்கள் உள்ளத்தை சஞ்சலப்படுத்தாத தேவன்!

வேதவாசிப்பு
லேவியராகமம்
அதி: 10 – 11

"நான் சஞ்சலப்படுத்தாத நீதிமானின் இருதயத்தை..." (எசேக்கியேல் 13:22)

கர்த்தருக்குள் பிரியமானவர்களே! **ஜீவனுள்ள தேவன் இயேசுகிறிஸ்துவின் தூய நாமத்தினால் இன்றும் உங்களுக்கு செழிப்புடன் கூடிய நல்ல நாளே**! என வாழ்த்துகிறேன்! இம்மாதம் முழுவதும் கர்த்தர் நமக்கு பெரிய காரியங்களை செய்ததன் நிமித்தம் **இறுதி நாளான இன்று எண்ணிலடங்கா ஸ்தோத்திரங்களைச் செலுத்துவோம். எம் தேவன் நீதிமானாய் இருக்கிறார்.** அவரது சுயாதீனத்தின்படி தெரிந்துக் கொண்ட யாவரையும் சொந்த பிள்ளைகளாக மாற்றியதுடன் நீதிமான்களாய் விளங்கவும் செய்கிறார். **இன்றும் பரலோக பிதாவின் சொந்த பிள்ளைகளானால் நீங்களும் நீதிமான்களே**!

தேவ பிள்ளைகளே! இன்றைய எம் பிரதான வேத வசனம் கூறுகிறது நீதிமான்களின் இருதயத்தை ***அவர் சஞ்சலத்திற்கு உள்ளாக்குவது இல்லை என்பதாக.*** ஏனெனில் ***அவர் நீதிமானாய் விளங்குவதால் நீதிமான்களாய் வாழும் அவரது பிள்ளைகளை அவர் தம் அடைக்கலத்தில் வைத்துக் கொள்வார். யாரும் அவர்களது இருதயத்திற்கு வேதனை உண்டு பண்ண இடமளியார்.*** அப்படி அவர் விரும்புகிறவர்கள் அவர்களுக்கு வேதனை உண்டு பண்ணுவதும் இல்லை. என் ஆத்மீக வாழ்வினிலே நான் உணர்ந்த ஒரு காரியம் யாதெனில் எம்மில் ***ஒரு தவறோ, பாவமோ ஏற்படும் போது எம் இருதயம் வேதனைப்படும்படியாகவோ, அல்லது கலக்கமடையும்படியாகவோ இடமளிப்பார்.*** இப்படிப்பட்ட தருணங்களில் எமக்கேற்படும் சோதனைகள், வேதனைகள் எம் உள்ளத்திற்கு அதிகளவான கவலையை உண்டு பண்ணும்.

தேவ பிள்ளைகளே! ***இவைகள் நேரிடுவது எம்மை செம்மைப்படுத்தி நீதிமான்களாய் மாற்றவேயல்லாமல் எமது அழிவுக்காக அல்லவே.*** ஏனெனில் **புலம்பல் 3:39**இல் எரேமியா தீர்க்கதரிசி கூறுகிறார் **"உயிருள்ள மனுஷன் முறையிடுவானேன் அவன் தன் பாவத்துக்கு வரும் தண்டனையைக் குறித்து முறையிடுகிறதென்ன"** என்றும் **புலம்பல் 3:40**இல் **"நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து கர்த்தரிடத்தில் திரும்பக்கடவோம்" என்றும் கூறுகிறார்.** இதன் மூலம் அவரது அன்பு எத்தகையது என்பது தெளிவாகிறது. அவர் காரணமில்லாமல் உங்கள் உள்ளத்திற்கு வேதனையை உண்டு பண்ண மாட்டார். யார் மூலமாவது **உங்கள் இருதயம் கவலைக்குள்ளாக்கப்படுமேயாகில் நீங்கள் நீதிமானாய் இருந்தால் உங்களை தேற்றி ஆறுதல் அளிக்கும் தேவனாய் உங்கள் அருகில் இருப்பார். ஜெயம் தரும் நாள்**!


ஜெபம்

எங்கள் ஆறுதலின் தேவனே! எங்களை ஆறுதல்படுத்தி, திடப்படுத்தி, தைரியப்படுத்தி எங்களை நீதிமானகளாக, உமக்குரிய பிள்ளைகளாக வாழ எங்களுக்கு கிருபையளிக்குமாறு இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.

~ஆமென்~

வேத வாக்குத்தத்தம்

"ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா?" (பரி.மத்தேயு 6:25)



அதிகாரத்தில் 9வது வசனத்தில் வானவில்லை மேகத்தில் அடையாளமாக வைத்து நோவாவிற்கு கொடுத்த வாக்குத்தத்தத்தின்படி அன்று ஏழு வர்ணங்களையுடைய வானவில்கள் இரண்டை ஆகாய மண்டலத்தில் காண்பித்து தேவ ஆராதனைகளுக்கு தடைகள் வாராதபடி அப்பிரதேசத்தில் மழையை நிறுத்துவதாக உறுதிப்படுத்தினார். அன்றைய நாள் தேவ ஆராதனையில் தேவ பிரசன்னமும், தேவ மகிமையும் நிறைந்து மிக அருமையாக நடைப்பெற்றது.



மூன்றாம் நாள் முதல் நாளைப் போலவே ஆகாய மண்டலத்தில் மழையை பெய்விக்கும் இருண்ட மேகங்கள் தென்பட்டன. தேவ ஆராதனை ஆரம்பித்த வேளை மழையை நிறுத்த வேண்டுமென "கைகளை உயர்த்தி ஜெபம் பண்ணுங்கள்" எனும் குரல் கேட்டது நான் உடனே வான மண்டலத்தை நோக்கிக் கரங்களை உயர்த்தி ஜெபித்தேன். அந்த நேரந்தொடங்கி தேவன் முதல் நாள் வானவில்லை அடையாளமாகக் காட்டியதைப் போன்றே அன்றைய நாள் தலவாக்கலை பிரதேசத்தில் ஒரு துளி மழை பெய்யாதபடி ஆகாய மண்டலத்தின் பலகணிகளைத் தேவன் அடைத்தார் என்பதை மிகவும் சந்தோஷத்துடன் உங்களுக்குக் கூறுகின்றேன்.

பிரியமானவர்களே! அன்றைய நாளில் மிகவும் உன்னதமான தேவ மகிமை நிறைந்த தேவ ஆராதனையை நடத்த எங்களுக்கு தேவ அநுக்கிரகம் குறைவின்றிக் கிடைத்தது. அன்றைய நாளில் பெரும்பாலான சாட்சிகள் கேட்கவும், காணவும் கிடைத்தது. அதில் இரண்டு சாட்சிகளை உங்களுக்காக பிரசுரிக்கின்றோம்.



## 1 வேலாயுதம் ரத்னசிங்கம் - உடபுசல்லாவ

மூன்று வருடங்களாக நுரையீரலில் புண் ஏற்பட்டதால் சாப்பிட முடியாதிருந்த அவர் தேவ வெளிப்பாட்டின் மூலம் அழைத்து ஜெபித்ததன் பின்பு உடனடியாக சுகத்தைப் பெற்றுக் கொண்டார்.

****************************



## 2 லெட்சுமணன் - பாமஸ்டன்


இரண்டு வருடங்களாக கைத்தடி உதவியுடன் மாத்திரமே நடந்து கொண்டிருந்தவர் தேவ ஆராதனையில் சுகம் பெற்று கைத்தடி துணையின்றி நடந்தார்.

****************************

மூன்றாம் நாள் நாலாயிரத்துக்கும் மேலான ஜனங்கள் தேவனின் இரக்கத்தைப் பெற்றபடியால் எண்ணிடலங்காத ஸ்தோத்திரங்களையும், நன்றிகளையும் செலுத்துகின்றேன். சகல கனம் துதி மகிமை அனைத்தும் நம்மை சிருஷ்டித்த ஜீவனுள்ள தேவனுக்கே உரித்தாகட்டும்!

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! போதகர் ஏ.ஜே.ஜோசப்

# இயேசு கைவிடார் திருச்சபைக்கு செல்லும் வீதியின் வரைப்படம்.




## எங்களுடைய கணனி ஔிபரப்பில் தொடர்பு கொள்வதற்கு...

Apple லும் Android கையடக்க தொலை பேசியின் மூலமும் டெப் வழியாகவும் Play store கிளிக் செய்து jesusnf என Type செய்து NF ஐ கிளிக் செய்யுங்கள்

Google.com » ustream.tv » jesusnf » jesusnf (click)

## இடைவிடாமல் உங்கள் ஜீவ மன்னா தின மஞ்சரியை பெற்றுக் கொள்ள வாசகக் கட்டணங்கள், காணிக்கைகள், சந்தோஷ காணிக்கைகளை எமக்கு தவறாது அனுப்பி வையுங்கள்!

**பணம் அனுப்ப**

கிராண்டபாஸ் தபால் காரியாலயம்
போதகர் ஏ.ஜே.ஜோசப்
என்னும் பெயருக்கு அனுப்புங்கள்.

**பணம் வைப்பிலிட**

போதகர் ஏ.ஜே.ஜோசப்
கணக்கு இலக்கம் 8076982701
கொமர்ஷல் வங்கி,
கிராண்ட்பாஸ் கிளை
பணத்தை வைப்பிலிட்டு
பற்று சீட்டை எமக்கு அனுப்பவும்



போதகர் ஏ.ஜே.ஜோசப்

ஜீவ மன்னா தின தியான புத்தகத்தை தபால் மூலம் ஒவ்வொரு மாதமும் பெற்றுக் கொள்ளலாம்.
விலாசத்தை அனுப்பவும்

R/N: QD/57/NEWS/2016

## இயேசு கைவிடார் சுவிசேஷ பணியகம்

இல:60/5, புதிய களனி பாலம் வீதி, ஒருகொடவத்த, வெல்லம்பிடிய. (பழைய டொயொடா நிறுவனக் கட்டிடம்).

011-2437189 011-2334865 071-4922929

arulandu.joseph@gmail.com www.jesusnf.org

இல:60/5, புதிய களனி பாலம் வீதி, ஒருகொடவத்த, வெல்லம்பிடிய ஜீவ மன்னா குட் நியூஸ் பிரிண்டர்ஸ் அச்சகம் மூலம் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.